# இலக்கு

இதழ் 68

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ்

மார்ச் 08, 2020

GLOBAL TAMIL MEDIA CENTER, USA



Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakku.ilakku.10 https://twitter.com/Ilakku1




## ஈழத்திலும் தமிழ் தொண்டாற்றிய ஆசான் அறிவரசன் அவர்கள் இயற்கை எய்தினார்

கல்யாணி

## அழிக்கப்படும் வரலாறும் பறிக்கப்படும் வாழ்விடமும்

மட்டுரோன்





## மாவீரர், போராளி குடும்பங்களை விமர்சிப்பவர்களை மக்கள் ஆதரிக்க மாட்டார்கள்

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் **சிவசக்தி ஆனந்தன்**

## நாம் அனைவரும் உறுதி பூணும் சர்வதேச மகளிர் தினம்


கனடாவில் இருந்து **இராஜினி பற்றர்சன்**





## விவசாய உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு அடைவதை இந்தியா விரும்பாது

கோ- ரூபகாந்





தமிழ் தேசிய இலக்கை நோக்கிய தாயகம், தமிழகம் மற்றும் அனைத்துலக செய்திகள், ஆய்வுகள் என்பவற்றை தினமும் எமது இலக்கு இணைய தளத்தில் பார்வையிட தவறாதீர்கள் !

www.ilakku.org

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி
# மட்டக்களப்பில் போராட்டம்




தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையினை வலியுறுத்தியும், காணாமல் போனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வினை கோரியும் மட்டக்களப்பில் மாபெரும் கவன ஈர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இந்தப் போராட்டம் நேற்று(07) காலை முன்னெடுக்கப் பட்டது.

சர்வதேச மகளிர் தினம் அனுஸ்டிக்கப் படவுள்ள நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெண்கள் அமைப்பு, காணாமல் போனோர் அமைப்பு உட்பட பல்வேறு அமைப்புகள் இணைந்து இந்தப் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தன.

காந்தி பூங்காவில் பேரணி ஆரம்பமாகி, பூங்கா முன்பாகவுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தூபிக்கு அருகில் கவன ஈர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய், மீண்டும் மீண்டும் விடுதலைக்கான போராட்டமா?, அரசே அரசியல் கைதிகளின் குடும்பங்களின் கண்ணீரை நிறுத்து, அரசே, சர்வதேசமே பாதிக்கப்பட்ட பெண்களின் அவலக் குரல் கேட்கவில்லையா?, ஜனநாயக நாட்டில் மனித உரிமைகளை மீறாதே பல ஆண்டுகள் எங்கள் உறவுகளை தடுத்து வைத்திருப்பதனால் நீதிக்கு அழைக்கின்றோம், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பதில் கூறுவது யார்?, போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளையும் போரா ட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள், அருட் தந்தையர்கள், அரசியல் கைதிகளின் குடும்ப உறுப்பினர்கள், காணாமல் போனவர்களின் குடும்ப உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது நுண்கடனால் பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தடுக்கக் கோரியும், காணாமல் போனவர்களின் பிரச்சினைக்கான தீர்வினை வழங்குமாறும் பெண்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைக்கான தீர்வினை வழங்குமாறும் வலியுறுத்தப்பட்டது.

அத்துடன் காணாமல் போனவர்களின் பிரச்சினையை மறக்குமாறு சிறீலங்கா அரசுத் தலைவர் கோத்தபயா ராஜபக்ஸ கோரியதற்கு எதிரான கருத்துக்களும் இதன் போது முன்வைக்கப்பட்டன.

## சிறீலங்கா மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர் த.தே.கூட்டமைப்பின் வேட்பாளர்



சிறீலங்கா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உள்ள ஐந்து உறுப்பினர்களில் ஒருவரான அம்பிகா சற்குணநாதன் என்பவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது வேட்பாளராக நிறுத்த முற்பட்டுள்ளது பல சர்ச்சைகளை தோற்றுவித்துள்ளதாக யாழ். தகவல்கள் தெரிவித்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு ஏதுவாக அம்பிகா கடந்த வெள்ளிக்கிழமை (06) தனது பதவியை துறந்துள்ளார். அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடவுள்ளார். வேட்பாளர் தொடர்பான இறுதியான பட்டியல் இந்த வாரம் வெளியிடப்படும் என கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சிறீலங்கா மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உறுப்பினராக 2015ஆம் ஆண்டு நியமனம் பெற்ற அம்பிகா, மனித உரிமை செயற்பாட்டாளராக பல வருடங்கள் பணியாற்றியிருந்தார்.

1998ஆம் ஆண்டில் இருந்து 2014ஆம் ஆண்டு வரையிலும் சிறீலங்கா மனித உரிமைகள் அமைப்பின் ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தின் ஆலோசகராக பணியாற்றியிருந்தார்.

# சிறீலங்காவுக்கு எதிராக தடைகளை ஏற்படுத்த
## மனித உரிமை அமைப்பு ஒன்றை அமைக்கின்றது பிரித்தானியா



மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட சிறீலங்கா உயர் அதிகாரிகளுக்கு எதிராக பிரித்தானிய அரசு சுயாதீன அனைத்துலக மனித உரிமைகள் அமைப்பு ஒன்றை உருவாக்க திட்டமிட்டு வருவதாக பிரித்தானியாவின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் அமைச்சர் நைஜெல் அடம்ஸ் தெரிவித்துள்ளார். இந்த அமைப்பு சிறீலங்காவுக்கு எதிரான தடைகள் தொடர்பில் ஆராயவுள்ளது.

எதிர்வரும் மாதம் நாடாளுமன்றத்தில் இரண்டாவது சட்ட மூலம் கொண்டுவரப்பட்ட பின்னர் இந்த அமைப்பு தனது பணிகளை ஆரம்பிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

தொழிற் கட்சியின் நிழல் அமைச்சர் அப்சல் கான் கேட்ட கேள்வி ஒன்றிற்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். சிறீலங்காவில் இன நல்லிணக்கப்பாடுகள், பொறுப்புக் கூறல், நீதி விசாரணை போன்றவற்றை மேற்கொள்வதில் பிரித்தானிய அரசு தொடர்ந்து ஆர்வமாகவே உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொண்ட 30/1, 34/1, 40/1 ஆகிய தீர்மானங்கள் அனைத்துக்கும் பிரித்தானிய அரசு தனது ஆதரவுகளை வழங்கி வந்துள்ளது. போரின் போது எல்லா தரப்பினரும் மேற்கொண்ட மனித உரிமை மீறல்களை விசாரணை செய்வது அவசியமானது என பிரித்தானிய அரசு தெரிவித்துள்ளது.

சவீந்திர சில்வாவை இராணுவத் தளபதியாக நியமித்ததற்கு எதிராக ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் இணைந்து பிரித்தானிய தூதரகம் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் கொழும்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. சில்வா போர்க் குற்றங்களை மேற்கொண்டவர் என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த மாதம் 25ஆம் நாள் சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தனாவை பிரித்தானியாவின் தென் ஆசிய விவகாரங்களுக்கான அமைச்சர் ஜெனீவாவில் சந்தித்த போது, பொறுப்புக் கூறல் மற்றும் நீதி விசாரணைகள் குறித்து கலந்துரையாடியிருந்தார்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தீர்மானங்களை சிறீலங்கா நிறைவேற்ற வேண்டும் என பிரித்தானியா தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றது.

## மீண்டும் சீனாவிடம் இருந்து பில்லியன் டொலர்கள் கடன்

சீனாவிடம் இருந்து 1.3 பில்லியன் டொலர்களை கடனாக பெறுவதற்கு சிறீலங்கா தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவின் அபிவிருத்தி வங்கியிடம் இருந்து 1 தொடக்கம் 2 பில்லியன் டொலர்கள் கடனாக கோரப்பட்டதாகவும், ஆனால் 1.3 பில்லியன் டொலர்களை வழங்குவதற்கு சீனா சம்மதித்துள்ளதாகவும் சிறீலங்கா மத்திய வங்கியின் பிரதித் தலைவர் நந்தலால் வீரசிங்க தெரிவித் துள்ளார்.

சீனாவின் இந்த நிதி உதவி சிறீலங்காவின் பொருளாதார நெருக்கடியை குறைக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது. கடந்த ஜனவரி மாதம் சிறீலங்கா அரசு வங்கிகளிடம் இருந்து 120 பில்லியன் ரூபாய்களை கடனாக பெற்றிருந்தது.

இதனிடையே, அமெரிக்காவின் மிலேனியம் சவஞ்ச் உடன்பாட்டின் 480 மில்லியன் டொலர்களை புறக்கணித்துள்ள சிறீலங்கா, மீண்டும் சீனாவிடம் கடன் பெற்றுள்ளது.

## வெளிநாட்டு பயணிகளை தடுத்து வைக்கும் நிலையமாக மட்டக்களப்பு தனியார் வளாகம்



கொரோனா வைரஸ் நோயாளர்களை தடுத்து வைக்கும் நிலையமாக மட்டக்களப்பு தனியார் பல்கலைக் கழகம் மற்றும் கன்ட காடு புனர்வாழ்வு நிலையம் என்பன மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாலி, தென்கொரியா, ஈரான் ஆகிய நாடுகளில் இருந்து வரும் பயணிகள் இந்த நிலையங்களில் 14 நாட்கள் தடுத்து வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## இந்தியாவின் குடியுரிமைச் சட்டத்திற்கு எதிராக களமிறங்கியது ஐ.நா மனித உரிமைகள் அமைப்பு



இந்தியா அண்மையில் கொண்டு வந்த குடியுரிமைச் சட்டத்திற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கு தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பு இந்தியாவில் உள்ள உயர் நீதிமன்றத்தை அணுகியதால் இந்தியா பதற்றமடைந்துள்ளது.

இந்தியாவின் குடியுரிமைச் சட்டத்திற்கு எதிராக இந்திய குடிமகன் ஒருவர் தொடுத்த வழக்கில் மூன்றாம் தரப்பாக ஐ.நா மனித உரிமைகள் ஆணைக் குழு குறிப்பிடப்பட்டுள்ளதால், மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவர் மிச்செல் பசெலற் உயர் நீதிமன்றத்திற்கு தனது பதிலை அனுப்பியிருந்தார்.

ஆனால் குடியுரிமைச் சட்டம் என்பது இந்தியாவின் உள்வி வகாரம் என இந்தியாவின் வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் ரவீஸ்குமார் கடந்த செவ்வாய்க்கிழமை(03) தெரிவித்துள்ளார்.

இந்தியா ஒரு இறைமையுள்ள நாடு, இந்த சட்டம் நாடாளுமன்றத்தின் அனுமதியுடனேயே மேற்கொள்ளப்பட்டது. உள்விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிடுவதை நாம் விரும்பவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தியா நிறைவேற்றிய குடியுரிமைச் சட்டத்தில் தாம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக இந்தியாவின் 1.3 பில்லியன் மக்கள் தொகையில் 15 விகித்தை கொண்ட மூஸ்லீம் மக்கள் தெரிவித்துள்ளனர்.

## கொரோனா வைரஸ் - இரண்டு வாரங்களில் 19 பில்லியன் ரூபாய்களை இழந்தது சிறீலங்கா



கோவிட்-19 எனப்படும் கொரோனா வைரஸ் இன் தாக்கத்தால் உலகின் பொருளாதாரம் மந்த நிலையை அடைந்துள்ளது. சிறீலங்காவில் உள்ள தமது வங்கி முறிகள் மற்றும் கடன் பத்திரங்களை மீளப் பெறுவதில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தீவிரம் காண் பித்து வருகின்றனர்.

கடந்த இரு வாரங்களில் சிறீலங்காவில் இருந்து 19.6 பில்லியன் ரூபாய்கள் பெறுமதியான பணம் சிறீலங்காவில் இருந்து வெளியேறியுள்ளதாக சிறீலங்கா மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

வைரசின் தாக்கம், உலகின் அவசர சுகாதார நடவடிக்கை என்பன சிறீலங்காவின் பொருளாதாரத்தை கடுமையாக பாதித்து வருவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

சீனாவுடன் சிறீலங்கா நெருங்கிய வர்த்தக தொடர்புகளை கொண்டிருப்பதனால், பெருமளவான நுகர்வுப் பொருட்களை சீனாவிடம் இருந்து கொள்வனவு செய்து வருகின்றது. தற்போது இந்த வழங்கல்களில் ஏற்படும் தாமதம், உலகப் பொருளாதார பின்னடைவு என்பன கடுமையாக சிறீலங்காவை பாதித்து வருகின்றது.

சிறீலங்காவின் சுற்றுலாப் பயணத் துறையும் முற்றாக முடங்கும் நிலையை அடைந்துள்ளது. உலக நாடுகளில் உள்ள மக்கள் பயணங்களை தவிர்ப்பது ஒருபுறமிருக்க, சீன பயணிகளின் வரவு நிறுத்தப்பட்டதும் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

இலக்கு

## "ஈழத்தமிழர் உரிமைகள் மீட்பு" திட்டம் தேர்தல் அறிக்கையில் முன்வைக்கப்பட வேண்டும்

ஏப்ரல் 25ஆம் திகதி சிறீலங்கா தனது பாராளுமன்றத்திற்கான 16ஆவது பொதுத் தேர்தலை நடாத்துவதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இந்த அறிவிப்பு தற்போதைய சிறீலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்ச அவர்களின் கட்சிக்குப் பாராளுமன்றத்தில் உள்ள சிறுபான்மை நிலையினை மாற்றி பெரும்பான்மை நிலைக்குக் கொண்டு வந்து தாங்கள் விரும்பியவாறு சட்டவாக்க அதிகாரத்தைப் பயன்படுத்த, அவரின் சகோதரரான சிறீலங்கா அரச அதிபர் கோட்டபாய ராஜபக்சா அவர்கள் எடுத்துள்ள அரசியல் செயல்பாடென்பது உலகறிந்த விடயம்.

இந்த வகையில் தங்கள் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவதற்காகச் சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு வெளிப்படையாகவே இவர்கள் அரச அங்கீகாரத்தைப் பல நிலைகளில் காண்பித்துச் சிங்கள பௌத்த பெரும்பான்மை வாக்குகளால் நாட்டின் மற்றைய இனங்களின் வாக்குப் பலத்தில் தங்காது தாம் வெற்றி பெறத் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றனர். இது சிறீலங்கா அரசாங்கம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் மிகத் தெளிவாகத் தெரிகிறது.

முதல் நடவடிக்கையாகச் சிங்கள தமிழ் தேச இனங்களுடன், பெரும்பான்மையும் தமிழ் பேசும் முஸ்லீம் மக்கள், தமிழையே தங்கள் தாய் மொழியாகக் கொண்ட மலையகத் தமிழ் மக்கள் கூடவே மற்றைய நாடுகளில் இருந்து இலங்கையில் குடியேறிய மலேயர்கள் போன்ற சிறிதளவு எண்ணிக்கையான மக்கள் என்னும் பல்லின மக்கள் வாழும் இலங்கைத் தீவில், சிங்களவர் தவிர்ந்த மற்றையவர்களின் அரசியல் அடையாளங்களையே மறுத்து, சிறீலங்கா சிங்கள பௌத்த நாடு. இங்கு இனக் கூட்டங்களே உள்ளன எனவும், அவற்றின் பொருளாதார வளர்ச்சியை மட்டும் தாங்கள் ஏற்படுத்தப் போதவதாகவும் அறிவித்து, இனத்துவச் சிறுபான்மையினங்களுக்கு உள்ள அனைத்துலக மனித உரிமைப் பாதுகாப்புகளையும் கூட, சிங்களவர்கள் அல்லாதவர்களுக்கு இல்லாது செய்யும் தமது நோக்கை வெளிப்படுத்தினர்.

அடுத்து ஒரு பல்லின மக்கள் வாழும் நாட்டில் சிங்களப் பெரும்பான்மை விரும்பவில்லை என்பதால், அரசியல் அதிகாரப் பரவலாக்கல் என்ற பேச்சுக்கே இடமில்லை என இந்திய மண்ணில் நின்றே பகிரங்கமாக இந்தியாவின் வேண்டுகோளை மறுத்தனர். தொடர்ந்து சிறீலங்காவின் சுதந்திர தினத்தன்று, சிங்களத்திலேயே நாட்டின் தேசிய கீதத்தைப் பாடுவித்து தமிழும் இலங்கையின் தேசிய மொழி என்ற சிறீலங்காவின் அரசியலமைப்பையே வன்முறைப்படுத்தினர். இவற்றின் உச்சமாக சிறீலங்காவின் அனுசரணையுடன், சிறீலங்காவில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகள் என்பனவற்றை முன்னேற்றுவதற்காக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையகம் 2015ஆம் ஆண்டு நிறைவேற்றிய 30/1 தீர்மானத்திலிருந்து, அது சிறீலங்காவின் இறையாண்மைக்கும் அரசியலமைப்புக்கும் எதிரானதெனக் கூறி விலகி அனைத்துலக முறைமைகள் சட்டங்கள் இவற்றுக்கும் தாம் கட்டுப்படப் போவதில்லை என்பதை உலகுக்கு நிரூபித்துள்ளனர்.

தங்களின் இந்த அப்பட்டமான மனித உரிமை மீறல்களுக்கு தமக்கு மக்களின் வாக்குப் பலம் உள்ளதெனக் காண்பிப்பதற்கான உத்தியாகவே இந்தத் தேர்தலை அவர்கள் நடாத்துகின்றனர். இந்தப் புதிய அரசியல் சூழலில், ஈழத்தமிழர்கள் தமது உரிமைகளை மீட்பதற்கு இந்தப் பொதுத் தேர்தலில் தங்கள் வாக்குரிமையை எவ்வாறு பயன்படுத்தப் போகின்றார்கள் என்ற எதிர்பார்ப்பு ஒன்று அனைத்துலக அரசியல் அரங்கில் தோன்றியுள்ளது. ஆகவே தமிழர்களது அனைத்து அரசியல் கட்சிகளும் தனிப்பட்ட அரசியல்வாதிகளும் ஈழத்தமிழர் உரிமைகளை மீட்பதற்கான பொது வேலைத் திட்டம் ஒன்றைத் தங்கள் தேர்தல் அறிக்கைகளுடன் இணைத்து தேர்தலில் போட்டியிட்டாலே, எவருக்கு விழுகிற வாக்காக இருந்தாலும் அது ஈழத் தமிழர்களின் உரிமைகளை மீட்பதற்கு விழுந்த வாக்காக உலகால் ஏற்கப்படும். இதனை வலியுறுத்திச் செய்விக்க வேண்டியது ஈழத்தமிழர் ஒவ்வொருவரதும் கடமையாக உள்ளது.

**- ஆசிரியர்**

# மாவீரர், போராளி குடும்பங்களை விமர்சிப்பவர்களை மக்கள் ஆதரிக்க மாட்டார்கள்

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ***சிவசக்தி ஆனந்தன்***



**விடுதலைப் புலிகள், மாவீரர் குடும்பங்கள், போராளி குடும்பங்களை விமர்சிப்பவர்களை மக்கள் ஆதரிக்க மாட்டார்கள் என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் அவர்கள், இலக்கு இணையத்திற்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்தார்.**

**கேள்வி:**

***ஐக்கிய தேசியக் கட்சிக்கு கடந்தகால ஜனாதிபதி தேர்தலிலும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதியிலும் தமிழரசுக் கட்சி தொடர்ச்சியாக ஆதரவை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது. இது தொடர்பாக உங்களின் நிலைப்பாடு என்ன?***

**பதில்:**

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இலங்கை தமிழரசுக் கட்சிக்குமிடையில் நீண்ட காலமாக உறவு இருக்கின்றது. இது முழுவதும் கட்சி நலன் சார்ந்ததாகவே காணப்படுகின்றது. அதன் ஒரு தொடர்ச்சியாகவே 2015இலிருந்து 2019 வரைக்கும் தமிழரசுக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி இரண்டும் இணைந்து தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு குரல் கொடுப்பதற்குப் பதிலாக நிபந்தனையற்ற ஆதரவுகளை வழங்கி வந்திருக்கிறார்கள்.

தமிழரசுக் கட்சியினதும் ஐக்கிய தேசியக் கட்சியினதும் உறவை பற்றிக் கூறுவதானால், தமிழரசுக் கட்சியின் தாய்க் கட்சியே ஐக்கிய தேசியக் கட்சி என்று சொல்லலாம். இது காலா காலமாக தொடர்ந்து வருகின்றது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒரு பகிரங்கமான உண்மை.

**கேள்வி:**

***1965 இல் டட்லி சேனநாயக்க இருந்த காலப்பகுதியில் வழங்கப்பட்ட ஆதரவானது மக்களுக்கு எவ்வாறான நலத்திட்டங்களை பெற்றுக் கொடுத்தது?***

**பதில்:**

மக்களுக்கு நன்மையான காரியங்களைப் பெற்றுக் கொடுப்பது என்பதற்குப் பதிலாக அவர்கள் ஐ.தே.க.கும் தமிழரசுக் கட்சிக்கும் இருந்த உறவில் 1979ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தன ஆட்சிக் காலத்தில் பயங்கரவாததடைச் சட்டத்திற்கு இவர்களும் அதற்கு ஒரு உடந்தையாக இருந்துள்ளனர். அந்த பயங்கரவாத தடச் சட்டமே 30, 35 வருடங்களாக நாட்டில் பல ஆயிரக் கணக்கான இளைஞர்களை கைது செய்வதற்கும், நாட்டில் நடைபெற்ற படுகொலைக்கும் காரணமாக இருந்திருக்கின்றது. ஆகவே ஐ.தே.க. தமிழரசுக் கட்சிக்கும் இருக்கும் உறவு தமிழ் மக்களுக்கு எந்த ஒரு நன்மையை யும் பெற்றுக் கொடுக்கவில்லை. அதற்குப் பதிலாக பல்வேறுபட்ட அநீதிகள் இழைக் கப்படுவதற்கு ஒரு காரணமாக இருந்துள்ளது.

**கேள்வி:**

***ஐ.தே.க.உடன் அதிகமாக உறவுகளை வைத்திருக்கும் தமிழரசுக் கட்சி, ஏன் மற்றைய கட்சிகளுடன் உறவுகளை பேண வில்லை?***

**பதில்:**

நான் முன்னர் குறிப்பிட்டது போல ஐ.தே.க. தமிழரசுக் கட்சியின் தாய்க் கட்சி. ஆகவே அவர்களுக்குள் நீண்ட காலமாக இருந்த உறவு, தங்கள் நலன் சார்ந்தே பேணு கின்றார்களே தவிர, மக்கள் நலன் சார்ந்து உறவை வைத்துக் கொள்ளவில்லை. தவறான விடயங்களை விமர்சிப்பது வேறு. ஒரு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கிக் கொண்டு தமிழ் மக்களை படுகுழியில் தள்ளுவது என்பது முழுக்க முழுக்க அவர்களின் சுயநலன் சார்ந்த விடயம்.

**கேள்வி:**

***நீங்கள் கடந்த 2 நாட்களுக்கு முன்னர் ஊடக அறிக்கையொன்றை வழங்கியிருந்தீர் கள் அந்த ஊடக அறிக்கை தேசிய அளவில் செல்வாக்குச் செலுத்தியிருந்தது. அந்த ஊடக அறிக்கை பற்றி கூறுங்கள்?***

**பதில்:**

யாழ்ப்பாணத்தில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஒரு நிகழ்வில் திரு சுமந்திரன் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இன்று தனியாக இருப்பதற்கு பல்வேறு இயக்கங்களை சகோதரப் படுகொலைமூலம் இல்லாமல் செய்தது தான் காரணம் என சொல்லியிருந்தார். இந்தக் கருத்தானது ஊடகங்கள், சர்வதேச வலைத்தளங்கள் ஊடாக பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. என்னைப் பொறுத்தளவில் நாங்களும் ஓர் ஆயுதப் போராட்டத்திலிருந்து வந்தவர்கள் என்ற வகையில், தமிழ் மக்களின் விடுதலைக்காக பல அமைப்புகள் ஆயுதம் தூக்கிப் போராடியது. தமது உயிரை துச்சமென பணயம் வைத்து பல ஆயிரக் கணக்கான போராளிகள் மடிந்திருக் கின்றார்கள். கடந்த காலங்களில் ஆயுதப் போராட்ட அமைப்புகளிடையே சில கசப்பான சம்பவங்கள் நடந்ததென்பது பகிரங்கமான உண்மை. அதை யாரும் மறுப்பதற்கில்லை.



இருந்தாலும், 2001ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்துடன் சம்பந்தப்பட்டிருந்த எங்களைப் போன்றவர்களை அழைத்து ஒரு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கி தமிழ் மக்களுக்கு ஒரு நிலையான ஒரு கௌரவமான ஓர் அரசியல் தீர்வை எட்டுவதற்காக ஒரு கொள்கையின் அடிப்படையில் இந்த கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அப்படியான ஒரு கூட்டமைப்பிற்குள் இருந்து கொண்டு அந்த கூட்டமைப்பின் பெயரையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும், மாவீரர்களையும், போராளிகளையும் தேர்தல் காலத்திலே அவற்றை பேசி வாக்குகளைப் பெற்று அதற்குப் பிற்பாடு தமிழீழ விடுதலைப் புலிகளுடைய தலைவரைப் பற்றி அல்லது விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பற்றி பாராளுமன்றத் திற்கு உள்ளேயும் வெளியேயும் சுமந்திரன் மட்டுமல்ல திரு சம்பந்தன் அவர்களும் கூட மிக மோசமாக விமர்சனம் செய்திருக்கின்றார்கள்.

எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் இந்த பழைய விடயங்களை கிளறி மேலும் மேலும் தமிழ் மக்களை அல்லது இருக்கக் கூடிய கட்சிகளிடையே முரண்பாடுகளை வளர்க்க விரும்பவில்லை. ஆனால் இவர்கள் தொடர்ச்சியாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், அதன் தலைவர் பிரபாகரனையும் கொடூரமானவர்கள், பயங்க ரமானவர்கள் என்று பாராளுமன்றத்தி ற்குள்ளே திரு சம்பந்தன் பேசிய உரைகள் இன்று ஒளி, ஒலிவடிவில் ஹன்சாட்டில் உள்ளது. அதேபோல் பல தடவைகள் சுமந்திரன் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் சம்பந்தமாக பகிரங்கமாக வைக்கப்பட்ட விமர்சனங்கள் இருக்கின்றது.



ஆகவே இந்தக் கருத்துக்களோடு தொடர்ச்சியாக முன்வைக்கின்றவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளும், மாவீரர் குடும்பங்களும், அல்லது ஆதரவாளர்களும் தொடர்ச்சியாக அந்த இயக்கத்தையும், அந்த இயக்கத்தின் தலைவரையும், கூட்டமைப்பின் முக்கிய தலைவர்களாக இருக்கக்கூடிய திரு சம்பந்தன், சுமந்திரன் போன்றவர்கள் மிகக் கொடூரமான விமர்சனங்களை முன்வைத்துக் கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழீழ விடுதலைப் புலிகள், மாவீரர் குடும்பம், போராளிகள் குடும்பம் எந்த வகையில் இவர்களை ஆதரிக்க முடியும் என்பது தான் எங்களின் முக்கியமான கேள்வியாக உள்ளது.

• • •



# விவசாய உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு அடைவதை இந்தியா விரும்பாது

**ஆ**சியாவின் முத்து என்று அழைக்கப்பட்ட இலங்கையில் அடுத்தடுத்து வரப்போகும் தேர்தல்களினால் அதன் பொருளாதார நிலைமைகள் மாத்திரமின்றி அரசியல் சமநிலையற்ற செயற்பாடுகளும் நிகழ்வதற்கான வாய்ப்புள்ளமை தற்போது அறியப்பட்டு வருகின்றது.

கடந்த ஆட்சிக் காலத்தில் பொருளாதாரம் மிகவும் கீழ் இறங்கிய நிலையில் காணப்பட்ட போதே ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றிருந்தது. குறித்த தேர்தலுக்கான செலவீனங்களை ஈடு செய்வதில் ஏற்பட்ட நிதி நிலைமைகளை சீர் செய்வதற்காக பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி திரும்ப பெறப்பட்டு வேலைத் திட்டங்களும் இடைநடுவில் கைவிடப்பட்ட நிலைமை காணப்படுகின்றது.

இந்நிலையிலேயே இவ்வாண்டு தேர்தல் ஆண்டாக பார்க்கப்படுகின்றது. பாராளுமன்ற மற்றும் மாகாணசபை தேர்தல்களை வைத்தேயாக வேண்டிய நிலையில் புதிய அரசு தள்ளப்பட்டுள்ள நிலையில் கடந்த காலங்களில் மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த போது சர்வதேச ரீதியில் பெறப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்த வேண்டிய காலமாகவே எதிர்வரும் ஆண்டுகள் உள்ளது.

2021 முதல் 2024 என்பது கடனை அதிகளவில் செலுத்தும் காலப்பகுதியாக பொருளியலாளர்களாலும், ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த அரசியல்வாதிகளாலும் கூறப்பட்டு வரும் நிலையில், இந்த பொருளாதார சுமையை எவ்வாறு நாட்டு மக்கள் ஈடு செய்யப் போகின்றனர் என்பதே தற்போதைய கேள்வியாகவுள்ளது.

ஏற்கனவே அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான வாக்குறுதியை எவ்வாறு நிறைவேற்றுவது எனவும் புதிய ஒரு லட்சம் வேலை வாய்ப்பை வழங்குவதிலும் புதிய அரசு பல சாவால்களை முகங்கொடுக்கவுள்ள நிலையிலேயே தேர்தல்களை சந்திக்க நேர்கின்றது.



வெறுமனே பாராளுமன்ற தேர்தலை மையமாக கொண்டு வாக்குறுதிகளை வழங்குவதில் புதிய அரசு காட்டி வரும் சிரத்தை தேர்தலின் பின்னரான காலத்தில் எவ்வாறு நிறைவேற்றுவது என்பதிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரசுமை தற்போது வெளிநாட்டு பணியாளர்களின் மூல மான பிரதான வருமானத்தில் தங்கியுள்ள நிலைக்கு சென்றுள்ளமையானது, பெரும் துர்ப்பாக்கியமாகவே பார்க்கப்படுகின்றது.

தேயிலை, இறப்பர், கொக்கோ போன்றவற்றினை பிரதான வருமானமாக கொண்ட இலங்கை, பெருந்தோட்ட காணிகளை மக்கள் குடியிருப்புக்களாகவும் குடியேற்றங்களாகவும் மாற்றியதன் விளைவே வெளிநாட்டு பணியாளர்களின் வருமானத்தினை பிரதான வருமானமாக பார்க்க வைத்துள்ளது.

எனவே இலங்கை போன்ற சிறிய நாடுகள் எதிர்கால திட்டமிடல் இன்றி நாட்டில் செயற்படுத்தும் ஒவ்வொரு நகர்வும் அதன் பொருளாதார ஸ்திரத் தன்மையை சீர்குலைக்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே இவ்வாறான நெருக்கடிகள் குடிமக்களை நிதியியல் ரீதியில் பாதிப்படையச் செய்யும் போதே மக்கள் அரசுக்கு எதிராக தமது எதிர்ப்பினை வெளிப்படுத்த முனைவர். அதற்கான சூழல் இலங்கையில் மிகவும் அண்மித்துக் கொண்டிருப்பதற்கான அறிகுறிகளே காணப்படுகின்றது. இதேவேளை பாராளுமன்ற தேர்தலுக்கான செவீனங்களை எவ்வாறு புதிய அரசு ஈடு செய்யவுள்ளது என்பதே தற்போதைய கேள்வியாகும்.

**கோ- ரூபகாந்**

உலக வங்கியின் தகவலின் அடிப்படையில் 2016ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதார செயற்றிறன் திருப்திகரமானதாக அமைந்ததாக சுட்டிக்காட்டுவதுடன், தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் ஜி.எஸ்.பி வரிச்சலுகை மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சிக்கு காரணம் எனவும் தெரிவித்திருந்தது, இதன் காரணமாக 2015ஆம் ஆண்டில் காணப்பட்ட 7.6 என்ற நிதிப் பற்றாக்குறை விகிதமானது, 2016ஆம் அண்டில் 5.4 சதவீதமாக குறைவடைந்திருந்தது. எனினும் நாட்டில் ஏற்பட்ட வறட்சியினால் விவசாயத் துறையில் ஏற்பட்ட தாக்கம் காரணமாகவே மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி 4.4 சதவீதமாக குறைவடைந்திருந்தாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான ஏற்ற மற்றும் இறக்க நிலையிலான பொருளாதார நிலைமைகளை கட்டுப்படுத்தி உள்ளூர் உற்பத்தியை பெருக்கும் வேலைத் திட்டத்தினை தற்பேயை அரசு செயற்படுத்த முனைகின்றது.

பல விவசாய உற்பத்தி பொருட்களுக்கான இறக்குமதி தடை ஏற்படுத்தப்பட்டுள்ள போதிலும் உள்ளூரில் மேற்கொள்ளப்படும் உற்பத்தி நாட்டு மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு போதுமானதாக உள்ளதா என்பதனை சிந்திக்க வேண்டியுள்ளது.

2006ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வெளியிடங்களிலிருந்து விவசாய உற்பத்தி பொருட்களை கொண்டு வருவதற்கான தடை விதிக்கப்பட்டிருந்தமையினால், உள்ளூர் விவசாய உற்பத்தி பெருக்கம் அதிகமாக காணப்பட்டது. தன்னிறைவான விவசாயம் காணப்பட்டது. உணவுப் பொருட்களினால் அங்கிருந்த மக்கள் எவ்வித பாதிப்புக்களையும் எதிர் கொள்ளாததுடன் விவசாய உற்பத்தி பொருட்களுக்கான விலைகளும் மிகவும் குறைவான நிலையிலேயே காணப்பட்டது.

இதேபோன்ற நிலையையே தற்போது இலங்கை கையாள நினைக்கின்றது. குறித்த செயற்பாடு வரவேற்கத்தக்கதாக காணப்பட்ட போதிலும் விவசாய நிலங்களில் ஏற்படுத்தப்பட்டு வரும் குடியேற்றங்களும் நீர் நிலைகளில் மக்களால் ஏற்படுத்தப்படும் மாற்றங்களும் இலங்கையின் விவசாய துறையிலான வளர்ச்சிக்கு பங்கமாகவே அமைய வாய்ப்புள்ளதாக பொருளாதார வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நிலையிலேயே இலங்கையின் அண்மைய நாடான இந்தியாவிலும் 2019ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சி சரிவை நோக்கி சென்றதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளன. 2019 – 2020 ஆம் ஆண்டுக்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7 வீதமாக இருக்கும் என கணித்த றிசேர்வ் வங்கி தற்போது வளர்ச்சி விதம் 6.9 வீதத்தை விட குறைவாகும் என தெரிவித்துள்ளது. இந்நிலையில் பொருளாதார ஆய்வு நிறுவனங்கள் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வீதம் 6.2 வீதத்தை தாண்டுவதற்கு வாய்ப்பில்லை என தெரிவித்துள்ளது.

எனவே அண்மைய நாடுகளில் அதிலும் இலங்கைக்கு உதவும் நாடுகளில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் இலங்கையின் அரசியல் கட்டமைப்பினூடாக அதன் கொள்கையில் மாற்றத்தினை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

இந்தியா அதனது பொருளாதார வளர்ச்சி வீதத்தினை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களில் அவதானம் செலுத்தி வரும் நிலையில், அங்கிருந்து இலங்கைக்கு பிரதானமாக இறக்குமதி செய்யப்படும் விவசாய உற்பத்தி பொருட்களுக்கான இறக்குமதி தடையை இந்தியா ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. எனவே குறித்த தடையினை நீக்க வேண்டிய அல்லது மறைமுகமாகவேனும் அனுமதி வழங்க வேண்டிய நிலைக்கு இலங்கை அரசு தள்ளப்படும். இவ்வாறான சூழலில் தன்னிறைவு விவசாய உற்பத்தியினை இலங்கை காணுவதற்கான வாய்ப்புக்கள் குறைவடைகின்ற போது, பொருட்களின் விலையேற்றத்தினை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட வாய்ப்புள்ளது.

இந் நிலையில் இவ்வாறான நிலைமைகளை சீர் செய்வதற்கான வாய்ப்பு எந்த அரசு ஆட்சிப்பீடம் ஏறினாலும் மக்களுக்கு தீர்வு என்பது எட்டாக்கனியாகவே போகும்.

• • •

# அழிக்கப்படும் வரலாறும் பறிக்கப்படும் வாழ்விடமும்



இலங்கையில் மூத்த குடிகள் வாழ்ந்த பகுதியாக கிழக்கு மாகாணம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் தமிழ் துறையின் வரலாற்று ஆய்வாளரான சி.பத்மநாதனின் கூற்றின் அடிப்படையில், இலங்கையில் தொன்மையான மனிதன் வாழ்ந்ததற்கான மிகவும் பழமையான படிமங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே காணப்படுவதாக குறிப்பிடுகின்றார்.

இலங்கையில் தமிழர்களே ஆதிக் குடியினர் என்பதை எந்த ஐயத்திற்கும் அப்பாற்பட்டு உறுதி செய்யும் ஆதாரங்கள் இன்று மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிகம் வெளிப்பட்டு நிற்கின்றன.

கி.மு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் பிராமி கல்வெட்டுகளும், மற்றும் அக்காலத்தைச் சார்ந்த சமய, சமூக நடவடிக்கைகள் சார்ந்த பொருட்களும் நாகர் ஆட்சியின் சிறப்பை எடுத்துக் காட்டுவனவாக உள்ளன.

இவ்வாறான மிகவும் பழமையையும் வரலாற்றினையும் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் பல வரலாற்றுத் தடங்கள் திட்டமிட்ட வகையில் அழிக்கப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் வருகின்றன.

மாவட்டத்தின் தெற்கே மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதியில் உள்ளது கோவில்குளம் என்னும் பண்டைய கிராமம்.

கோவில்குளம் பகுதி தமிழர்களின் வரலாற்று சிறப்பு மிக்க பகுதியாகவுள்ள போதிலும், அப்பகுதியை தமிழர்கள் இன்று முற்றாக இழக்கும் நிலையேற்பட்டுள்ளது. குறிப்பாக இப்பகுதி தற்போது முஸ்லிம்களினால் முற்றாக அபகரிக்கப்படும் அபாய நிலை தோன்றியுள்ளது.

இங்கு பண்டைய சிவன் ஆலயம் ஒன்றின் சிதைவுகள் சில, அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. காத்தான்குடி முஸ்லிம்களின் எதிர்ப்பு காரணமாக அந்த ஆய்வுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்த ஆலயத்தின் வரலாறு என்பது மிகவும் பழமையானதாக கருதப்படுகின்றது. மட்டக்களப்பை ஆண்ட கலிங்க இளவரசி உலக நாச்சியினால் கி.பி 398இல் இராஜ கோபுரத்துடன் கூடிய சிவன் கற்கோவில் அமைக்கப்பட்டு பிரதிஸ்டை பண்ணப்பட்டது. இந்த ஆலயம் அக்காலத்தில் காசி லிங்கேஸ்வரர் ஆலயம் என்று போற்றப்பட்டதாகவும் வரலாறுகள் கூறுகின்றன.

இக்கோவிலானது 1697இல் "அசவிடோ" என்ற போர்த்துக்கேய தளபதியினால் முற்றாக அழிக்கப்பட்டது. 1980ஆம் ஆண்டில் மேற்படி ஆலயம் இருந்ததாக கூறப்படும் கோவில்குளம் பகுதியில் காணிகளை துப்பரவு செய்யும் பணிகளில் பொது மக்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது படிகலிங்கம், ஐந்து தலை நாகத்தின் கீழ் அமர்ந்திருக்கின்ற விஸ்ணு சிலை மற்றும் விளக்கின் பாகங்கள், மணி என்பன குழி ஒன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டதனால், குறித்த பிரதேசமானது தொல்பொருள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பிரதேசமாக பாதுகாக்கப்பட்டன.

ஆனால் குறித்த பிரதேசமானது, 2012இல் காத்தான்குடி முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தினால் வேலிகள் போடப்பட்டு பள்ளிவாசல் உட்பட முஸ்லிம்களுக்கு 25 வீடுகள் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்ப ட்டன.

குறித்த நடவடிக்கையைக் கண்டித்தும் குறித்த பிரதேசத்தை தொல்பொருள் ஆய்வு மையமாக பிரகடனப்படுத்தக் கோரியும் ஆரையம்பதி சிவில் அமைப்பினால் தொல் பொருள் திணைக்கள பணிப்பாளருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டதனால், முஸ்லிம் சம்மேளனத்தின் கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டன.

**மட்டுரோன்**

இதன் பின்பு தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் அரசாங்க அதிபருக்கு முகவரி இடப்பட்டு மண்முனைப்பற்று பிரதேச செயலாளருக்கு பிரதிகள் இடப்பட்டு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது.

குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டதன்படி, மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்காது முழுக்க முழுக்க முஸ்லிம் சம்மேளனத்திற்கு சார்பாக செயற்பட்டது மாத்திரமின்றி, குறித்த பிரதேசத்தினை தொல் பொருள் ஆய்வுக்கு உட்படுத்துவதனை தவிர்ப்பதற்காகவும் மட்டக்களப்பில் இந்துக்களின் தொன்மையினை மறைப்பதற்குமான செயற்பாடுகளையுமே அவர் மேற்கொண்டார்.



ஏனெனில், கட்டுமானப் பணிகள் மேற்கொள்கின்ற மையப் பகுதியில் தொல்பொருள் ஆய்வுக்காக 40 பேர்ச் காணியை மாத்திரம் விடுத்து ஏனைய பிரதேசத்தில் தடையின்றி கட்டடங்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளமை, அப்பகுதி வாழ் தமிழ் மக்களிடையே ஒரு கொந்தளிப்பை அன்று ஏற்படுத்தியிருந்தது.

குறித்த காத்தான்குடி முஸ்லிம் சம்மேளத்தின் இந்த செயற்பாடுகளுக்கு அன்றைய கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்து செயற்பட்ட பிள்ளையான் ஆதரவு வழங்கியதாக குற்றச்சாட்டு உள்ளது.

இப்பகுதியில் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை அமைத்து குடியேற்றம் செய்ய முற்பட்ட போது ஆரையம்பதியில் உள்ள பல அமைப்புகள் அதற்கு எதிர்ப்பினை தெரிவித்த போதிலும், பிள்ளையானின் உதவியுடன் அன்றைய அமைச்சராக இருந்த ஹிஸ்புல்லா வீட்டுத்திட்டத்தினை அப்பகுதியில் அமைத்ததுடன் சிவன் ஆலயம் இருந்த பகுதியில் பாரிய பள்ளிவாசல் ஒன்றையும் அமைத்துள்ளார்.

அக்காலப்பகுதியில் ஆரையம்பதியை சேர்ந்த தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் அரசாங்கத்தின் பங்காளியாக இருந்த நிலையிலும், அப்பகுதி தொடர்பில் எந்தவித நடவடிக்கையினையும் முன்னெடு க்கவில்லையென்ற குற்றச்சாட்டு ஆரையம்பதி மக்களிடம் இன்றும் உள்ளது.

இன்று கிழக்கு மாகாணத்தினை முஸ்லிம்களிடம் இருந்து மீட்கப் போவதாக கூறி வரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியும் ஆரையம்பதியை சேர்ந்த அக்கட்சியின் செயலாளரும் குறித்த பகுதியை முஸ்லிம்களுக்கு தாரைவார்த்து கொடுத்துள்ளமை புலனாகிறது.

இந்த நிலையில் 2019ஆம் ஆண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பு விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் அரசாங்கத்தினால் மீண்டும் தொல்பொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் போது அப்பகுதியில் சிவன் ஆலயம் இருந்ததற்கான அத்திபாரங்கள் மற்றும் மிகவும் பழமையான மட்பாண்டங்கள் உட்பட பெருமளவான தொல்பொருள் அங்கு கண்டெடுக்கப்பட்டன.

தொடர்ந்து அதனை ஆய்வு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், ஆட்சி மாற்றத்தின் பின்னர் குறித்த பகுதியில் தொல்பொருள் ஆய்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கோவில் மற்றும் குளத்தினைக் கொண்டிருந்த காரணத்தினால் கோவில்குளம் என பெயர் பெற்ற இப்பகுதியில் குறித்த ஆலயத்தின் குளமானது இன்றும் காணப்படுகின்ற நிலையில் குறித்த குளமும் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக விடுக்கப்பட்டு வருகின்றது. அது தொடர்பில் இன்னும் கவனத்தில் கொள்ளப்படாத நிலையே இருந்து வருகின்றது.



எவ்வாறாயினும் மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழர்களின் வரலாறுகளை சுமந்த பல தடயங்கள் அழிக்கப்பட்டு வரலாறுகள் திரிபுபடுத்தப்பட்டு வரும் நிலையில், அவற்றினை ஆய்வு செய்து எதிர்கால சந்ததிக்கு கொண்டு செல்வதற்கு யாரும் முன்வந்து முனைப்புக் காட்டுவதாகத் தெரியவில்லை.

தமிழ் தொல்லியல்துறை ஆய்வாளர் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வருகை தந்து மட்டக்களப்பு மாவட்டம் தொடர்பான தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்டு வரும் நிலையில், அவருக்கான உதவிகள் என்பதும் கிடைக்காத நிலையே இருந்து வருகின்றது.

அவரின் அயராத முயற்சியே இன்று மட்டக்களப்பின் பண்டைய வரலாற்றை மட்டுமன்றி ஈழத் தமிழரின் தொன்மை வரலாற்றை மிக ஆணித்தரமாக நிலை நிறுத்தும் ஆதாரங்களை எமக்குத் தந்துள்ளது. இவர் போன்ற செயற்திறன், உண்மையான அக்கறை கொண்ட மனிதர்களின் பணிகளுக்கு பக்கபலமாக வேண்டியது தமிழினத்தின் கடமை ஆகும்.

இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களின் வரலாறும் வாழ்விடமும் மிகுந்த அச்சுறுத்தலுக்குள்ளாகி நிற்கின்றன. பௌத்த பேரினவாதத்திற்கு மட்டுமன்றி இஸ்லாமிய தீவிரவாத ஆக்கிரமிப்புகளுக்கும் இங்கு தமிழினம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

கிழக்கின் தமிழர் வரலாறும் வாழ்விடமும் அங்குள்ள மக்களுக்கான தேவை மட்டுமல்ல. அது உலகத் தமிழினத்திற்கே அவசியமான ஒரு அடித்தளம் என்பதை கருத்தில் கொண்டு எமது வரலாற்றையும் வாழ்விடத்தையும் பாதுகாத்து அவற்றை நிலைநிறுத்த அனைத்து தமிழ் மக்களும் ஆக்கபூர்வமான வழிகளில் விரைந்து செயலாற்ற வேண்டும்.

• • •



# ஈழத்திலும் தமிழ் தொண்டாற்றிய ஆசான் அறிவரசன் அவர்கள் இயற்கை எய்தினார்

இந்தியா, தென்காசி மாவட்டம், ஆழ்வார் குறிச்சியைச் சேர்ந்த பேராசிரியர் அறிவரசன் என்று அழைக்கப்படும் மு.செ.குமாரசாமி அவர்கள் உடல்நலக் குறைவால் தனது 81ஆவது வயதில், புதன்கிழமை(04) இயற்கை எய்தினார். இவருக்கு ஞானத்தாய் என்ற மனைவியும், முத்துசெல்வி, தமிழ்செல்வி ஆகிய இரு மகள்களும், செல்வநம்பி, அழகியநம்பி ஆகிய இரு மகன்களும் உள்ளனர்.

இறுதி வரை தமிழிற்காக பாடுபட்டு வந்த இவர், ஸ்ரீபரமகல்யாணி கல்லூரியில் 1964 தொடக்கம்1996வரைபேராசிரியராககடமையாற்றி ஓய்வு பெற்றிருந்தார். பின்னர் 2006ஆம் ஆண்டு தேசியத் தலைவர் அவர்களின் அழைப்பை ஏற்று ஈழம் சென்று அங்கு செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் ஈழப் போராளிகளுக்கும் செஞ்சோலை மாணவர்களுக்கும் தமிழ் கற்பித்தார்.

இரண்டு வருடங்கள் தொடர்ந்து தமிழ் கற்பித்த பின்னர் 2008ஆம் ஆண்டு மீண்டும் தமிழகம் திரும்பினார்.

இந்த வேளையில், தான் ஈழத்தில் கடமையாற்றிய இரண்டு வருட அனுபவங் களையும் ஊடகத்தின் மூலம் பகிர்ந்திரு ந்தார். அவர் கூறும் போது,

“எனது தமிழ்ப் பணி பற்றி போராளிகள் அறிந்திருந்தனர். 2006இல் அவர் களிடமிருந்து “தமிழீழத்தில் தமிழ்ப் பணி செய்ய இயலுமா? விருப்பம் இருப்பின் இங்கு வர இயலுமா ஐயா?” என்று எனக்கு அழைப்பு விடுத்தனர்.

அப்போது அங்கு யுத்த நிறுத்தம் அமுலில் இருந்த நேரம். சட்டப்படி விசா பெற்று 2006 மார்ச் மாதம் கிளிநொச்சிக்கு சென்றேன். தமிழீழத்தின் கல்வித்துறை பொறுப்பாளர்கள், “ஐயா இங்குள்ள தமிழாசிரியர்களை தகுதியுள்ளவர்களாக உருவாக்க வேண்டும். அதற்காக 40பேரை தேர்ந்தெடுத்துள் ளோம். அவர்களுக்கு பயிற்சியளித்து, தேர்வு நடத்தி சான்றிதழ் வழங்க வேண்டும். இதற்கான பாடத்திட்டங்களையும் நீங்களே உருவாக்கிக் கொள்ளுங்கள்” என்று கூறினர். “இந்தப் பணி முழுமையடைய எத்தனை நாட்கள் செல்லும்” என கேட்டனர். நான் அதற்கு இரண்டு வருடங்கள் ஆகும் என்று கூறினேன். “இரண்டு ஆண்டுகள் பணி செய்வதற்கு உங்களால் முடியுமா” எனக் கேட்டனர். எனக்கு முழுச் சம்மதம் என்று கூறினேன்.

எனக்கான அனைத்து வசதி களையும் செய்து தந்தனர். 40பேருக்கும் பயிற்சியளித்து ஆசிரியர்களாக உருவாக்கி னேன். அனைவரும் தேர்ச்சி பெற்றனர். தேசியத் தலைவர் பிரபாகரனின் மனைவி மதிவதனிக்கும், அவருடன் 8மாணவிகளுக்கும் தமிழ் கற்பி த்தேன். உலகத் தமிழர்கள் போற்றும் ஒரு மாமனிதரின் மனைவிக்கு கற்பித்தேன் என்பதில் என்பதில் எனக்கு பெருமிதம் உண்டு.

இதேவேளை அங்கு தமி ழீழ தேசியத் தொலைக்காட்சி யில் செய்தி வாசிப்பாளராக இருந்த இசைப்பிரியாவை சந்திக்க நேர்ந்தது. இசை என்பது தமிழ்ப் பெயர் ஆனால் பிரியா என்பது தமிழ் இல்லையே எனக் கூறினேன். அதற்கு அவர் எனக்கு இசை அருவி எனத்தான் பெயர் வைத்தார் கள் என்று கூறினார். மறுநாள் செய்தி வாசிக்கும் போது அவரின் பெயரை இசை அருவி என மாற்றி வாசித்தார். நான் சொன்னதை ஏற்று உடனே அதனை மாற்றிக் கொண்டது எனக்கு ஆச்சரியமா கவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. துடிப்பான அந்தப் பெண் இராணுவத்தினரால் படு கொலை செய்யப்பட்டதை ஊடகங்களில் பார்த்து வேதனை ப்பட்டேன்.

**கல்யாணி**




அங்கு பிரபாகரனை இரு தடவைகள் சந்தித்தேன். முதலில் நான் சென்று பணியைத் தொடங்கும் போது என்னை சந்தித்து பேசினார். பணிக்கான எல்லா ஒழுங்குகளும் சரியாக இருக்கின்றதா என கேட்டார். பின்னர் நான் பணியை முடித்து நாடு திரும்பும் போது சந்தித்தேன். அப்போது யுனெஸ்கோ நிறுவனம் 50 ஆண்டுகளில் அழியக்கூடிய மொழிகளில் தமிழ் மொழியையும் பட்டியலிட்டுள்ளனர். ஆனால் இங்கு வந்து பார்த்திருப்பார்களானால் அப்படி கூறியிருக்க மாட்டார்கள்.

தமிழீழம் கிடைத்து விட்டால், தமிழைப் பாதுகாக்கவும், தமிழ் வளர்ச்சிக்காகவும் நிறைய திட்டங்களை வைத்திருக்கின்றோம். தமிழை அழிய விடமாட்டோம் என்று கூறினார். உடனே எனது பெயர்(பிரபாகரன்) தமிழ்தானே ஐயா எனக் கேட்டார். நான் சிரித்துக் கொண்டு பதில் பேசாதிருந்தேன். அதைப் புரிந்து கொண்டு, எனக்கு கரிகாலன் என்று ஒரு பெயர் உண்டு என்றார். உடனே நான் மிக அழகான தமிழ்ப் பெயர் என்றேன்.

2008 மார்ச் மாதம் எனது பணி முடிந்து நான் நாடு திரும்ப இருந்த நேரம் சிறீலங்கா அரசாங்கம் யுத்தத்தை ஆரம்பித்திருந்த நேரம். நான் அவரைச் சந்தித்த போது அப்போதும் அவர் முகமலர்வுடனேயே காணப்பட்டார். ஐயா வந்து எத்தனை நாட்கள் ஆகி விட்டன என்று கேட்டார். சரியாக இரண்டு ஆண்டுகள் ஆகி விட்டன என்று பதிலளித்தேன். அப்பா இரண்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டனவா என்று ஆச்சரியப்பட்டார்.

தமழீழம் மலர்ந்தால் நீங்கள் எல்லாம் இங்கு வந்து தமிழ்ப்பணி செய்ய வேண்டும் ஐயா என்று கூறி வழியனுப்பி வைத்தார். அங்கு பணியாற்றிய இரண்டு ஆண்டுகளும், நான் தமிழ்ப் பணி செய்ததை பாக்கியமாகக் கருதுகின்றேன். அங்கு தான் தமிழ் வாழ்கின்றது” என்றார். தனது ஈழத்து அனுபவங்களை ‘ஈழத்தில் வாழ்ந்தேன் இரண்டாண்டுகள்’ என்னும் நூலின் மூலம் பதிவு செய்திருந்தார்.

மேலும் புலம்பெயர் தேசங்களுக்கும் சென்று அங்கும் ஈழத் தமிழர்களின் தொடக்கப் பள்ளிகள் மற்றும் தமிழ் பள்ளிகளுக்கு தமிழ் கற்பித்தார். பிரான்ஸ் நாட்டில் புலம்பெயர் தமிழர்களின் குழந்தைகளுக்காக தொடங்கப்பட்ட தமிழ் பள்ளிகளுக்கும் பாடத்திட்டங்களை வகுத் துக் கொடுத்ததுடன், தமிழாசிரியர் பயிற்சியையும் அளித்தார்.

மேலும் இவர் பல நூல்களையும் எழுதிய ள்ளார். ‘புத்தன் பேசுகிறான்’, ‘மாமனிதர் திருவேங்கடம் வேலுப்பிள்ளை’, ‘தமிழ் அறிவோம்’, ‘தமிழ்ப் பெயர் கையேடு’, ‘சோதிடப் புரட்டு’ ஆகிய நூல்களை எழுதிய ள்ளார். தமிழின விடுதலையைப் போற் றும் வகையில் ‘விடுதலைபுரம்’ என்ற காப்பியத் தையும் எழுதியிருந்தார்.

‘விடுதலை’ நாளேட்டின் துணை ஆசிரி யராக பணியாற்றிய இவர் ‘தமிழர் தாயகம்’ என்னும் சிற்றிதழின் ஆசிரியராகவும் இறுதி வரை பணியாற்றியிருந்தார்.

பகுத்தறிவாளர் கழகம் சார்பில் ‘தமிழிசை பாவாணர்’ என்ற பட்டமும், கடையம் திருவள்ளுவர் கழகம் சார்பில் ‘பைந்தமிழ் பகலவன்’ என்ற பட்டமும் இவருக்கு வழங்க ப்பட்டன.

தஞ்சையில் அமைந்துள்ள முள்ளிவாய் க்கால் முற்றம் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தி னராக கலந்து கொண்டிருந்தார்.

இவரின் மறைவிற்கு தமிழ் ஆர்வலர்களும், தமிழ் அரசியல்வாதிகளும் தங்கள் இரங்கல்களை தெரிவித்திருந்தனர்.

அத்துடன் இவரின் உடல் வியாழக்கிழமை நெல்லை அரசு மருத்துவமனைக்கு கொடையாக வழங்கப்பட்டது.

• • •



# நாம் அனைவரும் உறுதி பூணும்
# சர்வதேச மகளிர் தினம்




**கனடாவில் இருந்து இராஜினி பற்றர்சன்**

**தே**சிய பெண்கள் தினம் முதன் முதலில், அமெரிக்கா நியூயோர்க்கில் *1909*ஆம் ஆண்டு பெப்ரவரி *28*இல் கொண்டாடப்பட்டது. அதற்கடுத்த வருடம் மற்றைய நாடுகளுக்கும் அது பரவ, *1911* மார்ச் *19*அன்று, முதல் தடவையாக ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட பெண்கள் ஒன்றுகூடி, தமது வாக்கு மற்றும் சம உரிமைக்காக போராடினார்கள். *1914* மார்ச் *8* அன்று ஜேர்மனியில் முதன் முதல் சர்வதேச பெண்கள் தினம் கொண்டாடப்பட்டதையடுத்து, தொடர்ந்தும் இதே நாளில் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

இன்றைய காலத்தில் பெண்கள் ஆண்களுக்கு நிகராக பல சாதனைகளை புரிவதுடன், பல துறைகளிலும் சாதனைப் பெண்களாக பரிணமித்து வருவதை காணக் கூடியதாக உள்ளது. தமிழீழ பெண்களின் சாதனைகள் உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்தது என்றால் அது மிகையாகாது. ஆனாலும் பல பெண்கள் இன்றும் பல இன்னல்களுக்கு முகம் கொடுப்பதையும், அடிமைத்தனங்களில் இன்னலுறுவதையும் பார்க்கலாம்.

**கணவனுக்கு கீழ்ப்படிதல், தகப்பனுக்கு கீழ்ப்படிதல் அடிமைத்தனம் என்று நினைக்கும் பெண்கள் எம் மத்தியில் உள்ளனர். தவறான தெளிவூட்டல் குடும்பக் கட்டுக்கோப்பை சிதைத்து விடும். நேர்கொண்ட சிந்தனையும், தெளிவான பாதையும் சரியான இலக்கினை அடைய வழிவகுக்கும்.**

பெண்ணிய விடுதலை என்பது பெண்கள் தெரிந்தெடுத்து பயணிக்க வேண்டிய ஒரு பாதையாகும். அதே நேரம் ஆண்கள் பெண்களின் உரிமையை மதித்து அவர்களை பாதுகாத்து, ஊக்குவித்து வழிநடத்தும் போது அழகான ஒரு சமத்துவம் மிக்க சமுதாயத்தை உருவாக்க முடியும். ஒரு ஆணின் வெற்றிக்கு பின்னால், எப்படி பெண்ணின் பங்களிப்பு உள்ளதோ, அதேபோல் பெண்களின் வெற்றிக்கு பின்னால் பல ஆண்களின் பங்களிப்பு தேவை என்பது நிதர்சனமாகும்.

அதே போன்று, சக பெண்களும் உறுதுணையாகி, பெண்களின் சமத்துவத்தை மதித்து ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க பாடுபட வேண்டும். குறிப்பாக, வீரத்திற்கும், சாதனைக்கும் சொந்தக்காரரான தமிழீழப் பெண்கள் மீண்டும் தங்கள் நிலையை சிந்தித்து, கடந்து வந்த பாதையை நினைவுபடுத்தி, பல புரட்சிகர மாற்றத்தை உருவாக்க முன்வர வேண்டும். எமது சமூகத்தில் தலைவிரித்தாடும் அடிமைத் தனங்களில் இருந்து விடுதலையை கொண்டு வருவதுடன், எமது சமூகத்தை ஆரோக்கியம் மிகுந்ததாக மாற்றவும் முன்வர வேண்டும்.

தமிழர் வரலாற்றில் ஒப்பீட்டளவில் பெண்களுக்கான முன்னுரிமையும், மதிப்பும் காலங்காலமாக வழங்கப்பட்டு வந்தாலும், காலப்போக்கில் பிற சமூகங்களின் கலாச்சார தலையீடுகளும், சமூக வல்லாதிக்கமும், இவற்றை மாற்றியமைக்க காரணமாகின. குறிப்பாக சொத்துக்கள் பெண்களினூடாகவே பகிர்ந்தளிக்கப்படும். தாய்வழி பாரம்பரிய சொத்து பேணும் முறை மிகவும் முற்போக்கான ஒரு நடை முறையாக இருந்தது. இதன் மூலம் ஓர் சமூகத்தின் சொத்துக்கள் அச்சமூகத்தின் உழைப்பால் பெறப்பட்டவை எனும் வகையிலும், அவை தம் வழித்தோன்றல்களிடமே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனும் நியாயமான சிந்தனையின் அடிப்படையிலும் விரும்பி வழங்கப்படும் 'சீர்தானம்' ஆகசிதறி வாழ்ந்த தமிழ் சமூக பரம்பரைகளிடையே வழக்கிலிருந்து வந்தது. ஆனால் காலப்போக்கில் மக்கள் தொகை அதிகரிப்பு, நகர வாழ்க்கை முறை என்பவற்றினூடான சனத்தொகை அடர்த்தி அதிகரிப்பு, சமூகங்களுக்கிடையேயான நெருக்கம் என்பன கலப்பு திருமண சூழ்நிலைகளை உண்டு பண்ணியது. பல்வேறு




சமூகத்தை சார்ந்த இளையோர் கூடிப்பழகும் வாய்ப்பும், திருமண பிணைப்புகளும் தாமாக எழுந்தன. இப்போது சொத்துக்கள் ஒரு சமூகத்திடமிருந்து இன்னொரு சமூகத்திற்கு கைமாறும் நிலை வந்தது. இதற்கான பேரம் பேசல்கள் விரும்பி வழங்கும் தானத்திலிருந்து வலிந்து பெறும் 'சீதனம்' ஆகி தமிழ் பெண்களின் வாழ்வையும் எம் சமுதாயத்தின் மேம்பாட்டை சீரழிக்கும் காரணியாகவும் மாறியது.

தொழில் நுட்பம், மற்றும் நாகரீகம் வளர்ச்சியடைந்த இந்த காலகட்டத்திலும் எமது சமூகத்தில் வேரூன்றி இருக்கும் சீதனக் கொடுமையை முறியடிக்க எமது சமூகத்தின் ஒவ்வொரு ஆணும், பெண்ணும் முன்வந்தால், வெகு விரைவில் எம்முள் வேரூன்றி கிடக்கும் இச்சமூக குறைபாட்டை நீக்க முடியும் என்பதில் ஐயமில்லை. “அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு” என்னும் அறிவுரைக்கிணங்க, எம் சமூகத்தில் அனைவரும் சீதனக் கொடுமையை எதிர்த்து நின்றால், இந்த நடைமுறையை எமது சமூகத்தில் இருந்து முற்றாக அகற்ற முடியும்.

அடிமைத்தனம் என்றால் என்ன, மனித குலத்தின், ஒரு சமூகத்தின், ஒரு குடும்பத்திற்குரிய கட்டுக்கோப்பு என்ன என்பதற்குரிய தெளிவான அறிவைப் பெறுதல் மிகவும் அவசியமானதாகும். கணவனுக்கு கீழ்ப்படிதல். தகப்பனுக்கு கீழ்ப்படிதல் அடிமைத்தனம் என்று நினைக்கும் பெண்கள் எம் மத்தியில் உள்ளனர். தவறான தெளிவூட்டல் குடும்பக் கட்டுக்கோப்பை சிதைத்து விடும். நேர்கொண்ட சிந்தனையும், தெளிவான பாதையும் சரியான இலக்கினை அடைய வழிவகுக்கும்.

ஆண், பெண் என்பது விருத்தியடைந்த உயிரினங்களின் இலிங்க முறை இனப்பெருக்கத்திற்கான கூர்ப்பியல் பரிமாண விருத்தியாகும். இது தாவரங்கள், விலங்குகள், பறவைகள் என அனைத்து உயிர்களினதும் இன விருத்திக்கான இயற்கையின் ஏற்பாடாக அமைகிறது. அவ்வகை இன விருத்திக்கான தேவைகளின் அடிப்படையிலேயே பெண்களும் ஆண்களும் சிலவகை உடலியல் மற்றும் உளவியல் வேறுபாடுகளை கொண்டு விளங்குகின்றனர். ஆனால் செயல் திறனில் இருபாலாரும் ஒருவரை விட ஒருவர் குறைந்தவர் அல்ல. இந்த தெளிவு எம்முள் இருக்குமானால், மனித வாழ்வின் தேவைகளுக்கான செயற்பாடுகளை உரிய வகையில் பகிர்ந்து சரிநிகர் சமானமாக நாம் வாழ முடியும். இவ்விழிப்புணர்வு இல்லாமையே கடந்த காலங்களில் பெண் அடிமை செயல்களாக பரிணமிக்கவும் பெண் விடுதலைக்கான போராட்டமாகவும் வடிவெடுத்தது. அனைத்துலக மகளிர் தினம் என்பது இவ்விழிப்புணர்வை கொண்டுவரும் ஒரு தினமாகவே இன்றளவும் கடைப்பிடிக்கப் பட்டு வருவதுடன், பின்தங்கிய சமூகங்களிடையே பெண்களுக்கான சம உரிமையை வலுப்படுத்தும் செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தும் ஓர் நாளாகவும் அமைகிறது. மனித குலத்தின் மேம்பாட்டுக்கு, பெண் அடிமைத்தன சிந்தனைகளை விடுத்து ஒவ்வொரு பெண்ணும் ஆணும், பங்களிப்போம் என இந்த சர்வதேச மகளிர் தினத்தில் மீண்டும் உறுதி பூண்டு உழைப்போம்.

• • •

# பெண்ணியத்தை முதலாளித்துவம்

# அடிவருடியாக்கியது எப்படி?

தமிழில் **ந. மாலதி**




**மு**தலாளித்துவத்தின் சுரண்டல்களை கடுமையாக விமர்சித்தே ஆரம்பித்த பெண்ணிய இயக்கம் முதலாளித்துவத்திற்கும் அதன் தற்கால வடிவமான நவதாராளவாதத்திற்கும் ஆதரவான சில சிந்தனைகளை இன்று உருவாக்கி கொடுத்திருக்கிறது.

ஒருபெண்ணியவாதியாகநான்பெண்களின் விடுதலைக்கு போராடும் போது, ஒரு சிறப்பான உலகத்திற்காக சமத்துவமான, நீதியான, சுதந்திரமான உலகத்திற்காக போராடுகிறேன் என்றே நம்பினேன். ஆனால் பெண்ணியவாதிகளால் உருவாக்கப்பட்ட கருத்துக்கள் இதற்கு முற்றிலும் மாறுபட்ட தேவைகளுக்கு உதவுகிறது என்ற கவலை இப்போது எனக்கு வருகிறது. அன்று நாம் பாலியல் அடக்குமுறைகளுக்கு எதிராக உருவாக்கிய விமர்சனங்கள் இன்று புதிய வடிவிலான சுரண்டல்களை நியாயப்படுத்துவதற்கு கையாளப்படுகின்றன.

கொடுமை என்னவென்றால், பெண்களின் விடுதலை இயக்கம் இன்று நவதாராளவாதத்தின் சுதந்திர-வர்த்தக சமூகத்தை உருவாக்கும் முயற்சியில் சிக்கி ஒரு ஆபத்தான கூட்டாக கை கோர்த்து இயங்குகிறது. இதனாலேயே, அன்று ஒரு முற்றிலும் மாறுபட்ட உலக பார்வையை கொண்டிருந்த பெண்ணிய இயக்கம், இன்று தனிநபர் நன்மைகளை முன்னிறுத்துகிறது.

தொழில்சார் முன்னேற்றத்தை (*careerism*) முன்னிறுத்தும் சமூகத்தை அன்று விமர்சித்த பெண்ணியவாதிகள், இன்று பெண்களை தொழிலில் முன்னேறும்படி அறிவுரை கொடுக்கிறார்கள். அன்று சமூக கூட்டொருமையை மேலாக கருதிய இயக்கம் இன்று பெண் தொழிலதிபர்களை கொண்டாடுகிறது. அன்று மற்றவர்களின் நலனில் கரிசனை கொள்வதை மேன்மையாக கருதிய பார்வை இன்று தனிநபர் முன்னேற்றத்தையும் தனிநபர் திறமையையும் கொண்டாடுகிறது.



பெண்ணிய கருத்துக்களின் இம்மாற்றங்களின் பின்னால் முதலாளித்துவம் செயற்படுவதில் ஏற்பட்ட பெரிய மாற்றங்கள் இருக்கின்றன. இரண்டாம் உலக போருக்கு பின்னரான அரசினால் நெறிப்படுத்தப்பட்ட முதலாளித்துவம் மறைந்து இன்று அது புதிய வடிவத்தை எடுத்திருக்கிறது. இது அரசின் கட்டுப்பாட்டிற்கு வெளியே, உலகமயமாக்கல் சூழலில் வடிவெடுத்திருக்கும் நவதாராளவாதம். இரண்டாம் அலை பெண்ணியம் என்று அழைக்கப்படும் 60களில் தோன்றிய பெண்ணியம் முதலாளித்துவத்தின் முதலாவது வடிவத்தை, அதாவது அரச முதலாளித்துவத்தை, விமர்சித்து வளர்ந்தது. ஆனால் இன்று அது முதலாளித்துவத்தின் இரண்டாவது வடிவத்திற்கு, நவதாராளவாத்திற்கு அடிமையாகி விட்டது.

காலம் கொடுத்த அனுபவத்திலிருந்து இன்று பின்னோக்கி பார்க்கும்போது எமக்கு ஒன்று தெளிவாகிறது. அன்றைய பெண்ணிய விடுதலை கருத்துக்கள் இரண்டு வித்தியாசமான எதிர் காலத்தை நோக்கிய பாதையை எமக்கு கொடுத்தது.

ஒரு பாதையில், பெண் விடுதலையுடன் மக்கள் பங்கெடுக்கும் சனநாயகமும் சமூக கூட்டொருமையும் கைகோர்த்து வரும். இரண்டாவது பாதை தாராளவாதத்தின் ஒரு புதிய வடிவத்தில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் தனிநபர் சுதந்திரமும், திறமைக்கான முன்னேற்றமும் என்ற வாக்குறுதிகளை கொண்டு வரும். இவ்விதத்தில் அன்றைய பெண்ணியம் உறுதியான ஒரு எதிர் காலத்தை காட்டவில்லை.



இரண்டு விதமான வரலாற்று சமூகத்திற்கும் ஒத்துப்போன இப்பெண்ணியவாதம் இன்று ஒன்றிற்கு அடிமையாகி விட்டது. எமது கட்டுப்பாட்டிற்கு அப்பால் எம்மை மீறி இது நடக்கவில்லை. மாறாக நவதாராளவாதத்தின் கவர்ச்சியால் நாமே இதற்கு ஆதரவாக மூன்று கருத்துக்களை கொடுத்துள்ளோம்.

எமது முதலாவது வாதம், கணவர் உழைக்க மனைவி வீட்டை பராமரிப்பது என்பதை பற்றிய எமது விமர்சனமே. அரச முதலாளித்துவத்தின் அடிப்படையே இதுதான். பெண்ணியவாதிகள் இதை விமர்சித்தது இன்று "நெகிழ்வான முதலாளித்துவத்தை" நியாயப்படுத்த உதவுகிறது. இந்த முதலாளித்தும் இன்று பெண்களின் ஊதிய உழைப்பில், முக்கியமாக குறைந்த ஊதியம் பெறும் பெண்களின் உழைப்பில், அதிகம் தங்கி வளர்ந்திருக்கிறது.

இவ்வேலையை இளம் பெண்கள் மட்டுமல்ல, திருமணமான பெண்களும், தாய்மார் களும் கூட செய்கிறார்கள். இது எல்லா இனப் பெண்களுக்கும் பொருந்தும். உலகெங்கும் பெண்கள் ஊதிய தொழில்களில் பெருந்தொகையாக வந்து சேர்ந்த போது, அரச முதலாளித்து வத்தின் கணவர் மட்டும் ஈட்டும் குடும்ப வருமானம் என்ற கருத்துக்கு பதிலாக இருவரும் வருமானம் ஈட்டுவது என்ற ஒரு புதிய கருத்து, அன்று பெண்ணியவாதிகளால் முன்னிறுத்தப்பட்ட கருத்தாக, வளர்ந்திருக்கிறது.

இப்புதிய கருத்தின் பின்னால், ஊதியம் குறைக்கப்பட்டதும், தொழிலின் உறுதியற்ற தன்மையும், வாழ்க்கைத் தரம் குறைந்ததும், தொழில் நேரம் அதிகரித்ததும், வறுமை, முக்கியமாக பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில் வறுமை, மோசமானதும் மறைந்து கிடக்கிறது. இதையே நவதாராளவாதிகள் பெண்கள் மேம்பாடு என்று முன்னிறுத்துகிறார்கள்.

குடும்ப ஊதியத்தை பற்றிய பெண்ணியவாதிகளின்விமர்சனத்தைகாட்டி, முதலாளித்துவத்தின் இலாப த்தை பெருக்க பெண்கள் மேம்பாடு என்ற கனவை கையாளுகிறார்கள் நவதாராளவாதிகள். இதை நாம் உடைக்க வேண்டும். ஊதியத்திற்கான தொழிலை மையப்படுத்துவதை தவிர்த்து, மற்றவர்களை பராமரிக்கும் வேலை உட்பட, ஊதியமற்ற தொழிலை உயர்வானதாக்கும் கருத்துக்காக நாம் போராட வேண்டும்.

நவதாராளவாதம் கையிலெடுத்த எமது இரண்டாவது வாதம் இதுதான். வருமானத்தை மையப்படுத்திய ஏற்றத்தாழ்வுகளை மட்டுமே கணக்கிலெடுத்து அதை நிவர்த்தி செய்ய முயன்ற அரச முதலாளித்துவத்தை பற்றி நாம் சரியாகவே அன்று விமர்சித்தோம். வருமானத்திற்கும் அப்பால் பெண்களுக்கு எதிராக தொடரும் பாலியல் துன்புறுத்தல்கள், குடும்ப வன்முறைகள் போன்றவற்றை அரச முதலாளித்துவம் கணக்கெடுக்கவில்லை என்று நாம் விமர்சித்தோம்.

வருமானத்தை மட்டுமே மையப்படுத்திய அரசியலை நிராகரித்து, பாலியலை மையப்படுத்திய படிநிலைகளுக்கும் சவால் விட்டு பெண்ணியவாதிகள் அரசியலை விரிவுபடுத்தினார்கள். நீதி என்பது வருமானம் பாலியல் கலாச்சாரம் என்ற இரண்டு தளத்திலும் இருக்க வேண்டும் என்று விரிவுபட்டிருப்பதற்கு பதிலாக, பாலியல் கலாச்சாரத்தில் மட்டுமே சமத்துவம் என்று மாற்றி விட்டது நவதாராளவாதம்.

நவதாராளவாதிகள் பொருளாதார சமத்துவத்தை பற்றிய வாதத்தை மறைப்பதற்கான ஒரு நல்ல வாய்ப்பாக இது இப்போ உதவுகிறது. இதையும் இன்று பெண்ணியவாதிகள் மாற்றி பொருளாதார சமத்துவத்தை பாலியல் சமத்துவத்துடன் ஒருங்கிணைத்து முன்னிறுத்த வேண்டியுள்ளது.

இறுதியாக, பெண்ணியம் நவதாராளவாதத்திற்கு மூன்றாவது கருத்து ஒன்றையும் கொடுத்திருக்கிறது. அரச முதலாளித்துவம் தேவையானோருக்கு கொடுக்கும் உதவிகள் பெண்களுக்கும் சமத்துவமாக கொடுக்கவில்லை என்று பெண்ணியவாதிகள் அன்று சரியாகவே வாதிட்டார்கள். இன்று இதே வாதத்தை நவதாராளவாதம் "அரச உதவிகளுக்கு" எதிரான கருத்தாக கையிலெடுத்திருக்கிறது. இது மட்டுமல்ல, அரசார்பற்ற அமைப்புக்களையும் தனதாக்கி விட்டது நவதாராளவாதம்.

உலகின் வறுமையான பகுதிகளில் வாழும் பெண்களுக்கு அரசசார்பற்ற அமைப்புக்கள் கொடுக்கும் சிறிய கடனுதவி திட்டம், பெண்கள் நலனை மேம்படுத்தும் என்றும், அரச உதவித் தொகையைவிட இது சிறப்பானது என்றும், இது அரச உதவித் தொகை கொடுப்பதில் காணப்படும் பெண்கள் அடிமைப்படுத்தலுக்கு எதிரான பெண்ணியவாத திட்டம் என்றும் போற்றப்படுகிறது. இதன் பின்னால் உள்ள ஒரு உண்மை மறைக்கப்படுகிறது.

சிறு கடனுதவிகள் பெருமளவு வளர்ந்த அதே காலத்தில், வறுமையை நீக்க அரசுகள் முன்னெடுத்த பெரிய திட்டங்கள் கைவிடப்பட்டு விட்டன. சிறுகடனுதவிகள் இத்தகைய திட்டங்களுக்கு மாற்றாக இருக்க முடியாது. இங்கும் பெண்ணியவாதத்தின் கருத்து நவதாராளவாதிகளின் கையில் சிக்கி விட்டது. அரசு மக்களை சமத்துவமாக நடத்துவதற்காக முன்வைக்கப்பட்ட விமர்சனம் அரசையே விலத்தி வர்த்தகத்தை முன்னிறுத்துவதற்கு கையாளப்படுகிறது.

• • •



# மியான்மார் இனஅழிப்பு அரசுக்கு ஆதரவு:

# சூகிக்கு வழங்கப்பட்ட விருதை பறித்தது லண்டன் நகரசபை

மியான்மார் நாட்டின் அரசியல் தலைவர்களில் ஒருவரான ஆங் சான் சூகி தனது நாட்டின் ரோகிங்கியாமுஸ்லீம்மக்கள்மீதானஇனஅழிப்பை கண்டிக்கத் தவறியதுடன், அரசுக்கு ஆதரவாக செயற்பட்டதற்காக அவருக்கு வழங்கப்பட்ட விருதை இரத்துச் செய்வதாக பிரித்தானியாவின் லண்டன் நகரசபை தெரிவித்துள்ளது.


அண்மையில் கேக்கில் இடம் பெற்ற இனப் படு கொலை தொடர்பான விசாரணைகளின் போதும் சூகி அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்புகளை பேணியதுடன், அரசுக்கு ஆதரவாகவும் நடந்து கொண்டதாக அவருக்கு வழங்கப்பட்ட கௌரவ விருதை பறிப்பது தொடர்பாக கருத்து தெரிவித்த பொதுச்சபை தெரிவித்துள்ளது.

2017ஆம் ஆண்டு முஸ்லீம் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை தொடர்பில் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டது. ஆனால் சூகி அரச குழு ஒன்றை வழிநடத்தியிருந்தார்.

மியான்மார் அரசுடன் நெருங்கிய தொடர்பை வைத்திருந்ததாலும், சுதந்திர விண்ணப்ப குழுவின் கடிதங்களுக்கு அவர் பதில் அளிக்காததாலும் 2017ஆம் ஆண்டு அவருக்கு வழங்கப்பட்ட விருதை இரத்துச் செய்வதாக சுதந்திர பயன்பாடுகள் குழுவின் (City of London Corporation's Freedom Applications Committee) தலைவர் டேவிட் வூட்டன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்திற்காக அவர் பல ஆண்டுகள் மேற்கொண்ட அகிம்சை வழியிலான போராட்டத்திற்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டிருந்தது. ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கான அகிம்சை போராட்டத்திற்காக அவருக்கு 1991ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### சுவிஸ் நாட்டின் ஆயுத விற்பனைக்கு எதிராக போர்க் கொடி




சுவிற்சர்லாந்தில் உள்ள நிறுவனங்கள் ஆயுத ஏற்றுமதியில் அதிக கவனம் செலுத்தி வருகின்றன. 2019ஆம் ஆண்டில் 759 மில்லியன் டொலர்கள் பெறுமதியான ஆயுதங்களை 71 நாடுகளுக்கு அவை விற்பனை செய்துள்ளதாக சுவிஸின் பொருளதார விவகாரங்களுக்கான செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த தொகையானது 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 218 மில்லியன் டொலர்கள் அதிகமானது. அதாவது 43 விகித அதிகரிப்பு. டென்மார்க்கே அதிக ஆயுதங்களை கொள்வனவு செய்துள்ள போதும், அமெரிக்கா, பங்களாதேசம், ஜேர்மனி மற்றும் ரோமேனியா ஆகிய நாடுகளும் அதிக ஆயுதங்களை கொள்வனவு செய்துள்ளன.

கவச வாகனங்களே அதிகளவு விற்பனை செய்யப்பட்டுள்ளன. அது தவிர துப்பாக்கிகள், ரவைகள், போர் விமானங்களுக்கான பாகங்கள் என்பனவும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. எனினும் சுவிற்சர்லாந்தின் இந்த நடவடிக்கைக்கு எதிராக இராணுவம் அற்ற சுவிஸ் என்ற அரச சார்பற்ற நிறுவனம் தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் நாடுகளுக்கு சுவிஸ் அரசு ஆயுதங்களை விற்பனை செய்வதாக அது குற்றம் சுமத்தியுள்ளது. பகரைன், பங்களா தேசம், சவுதி அரேபியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்ய ப்படுவதை அது சுட்டிக் காட்டியுள்ளது.

இதனிடையே சுவிஸ் மன்னிப்புச் சபையும் இந்த விற்பனைக்கு எதிராக தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது. சுவிஸின் இந்த நடவடிக்கைக்கு எதிராக நாடு முழுவதும் கையொப்பம் சேகரித்து வாக்கெடுப்பு நடத்த தீர்மானித்துள்ளதாக அது மேலும் தெரிவித்துள்ளது.

### ஆப்கானில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் - அனைத்துலக நீதிமன்ற விசாரணைக்கு உத்தரவு



ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:


ஆப்கானிஸ்தானில் இடம் பெற்ற போரின் போது போர்க் குற்றங்களில் ஈடுபட்ட அனைத்து தரப்பினரையும் விசாரணை செய்வதற்கு அனைத்துலக நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. இந்த விசாரணைகளில் அமெரிக்க படையினர், தலிபான் படையினர் உட்பட அனைவரும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் என நீதியாளர் பியோற் கொப்மன்ஸ்கி தெரிவித்துள் ளார்.

அமெரிக்காவும் தலிபான் படையினரும் அண்மையில் அமைதி உடன்பாட்டில் கையொப்பமிட்ட பின்னர், இந்த அறிவித்தல் வெளிவந்துள்ளது. அமெரிக்காவின் எதிர்ப்புக்களையும் மீறி முற்று முழுதான விசாரணைகளை மேற்கொள்ள சட்டவாளர் பற்றோ பென்சூடா முயற்சி செய்து வருகின்றார்.

அனைத்துலக நீதிமன்றத்தில் அமெரிக்கா உறுப்பு நாடாக இல்லாத போதும், அவர்கள் ஆப்பகானிஸ்தானில் மேற்கொண்ட குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள முடியும். ஏனெனில் ஆப்கானிஸ்தான் உறுப்பு நாடாக உள்ளது என பற்றோ தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் அமெரிக்கா, அனைத்துலக நீதிமன்ற பணியாளர்கள் மீது கடந்த ஆண்டு பயணத் தடையையும் விதித்திருந்தது.

### 360,000 ஆப்கான் மக்களின் படுகொலைக்கு பின்னர் இடம்பெற்ற அமைதி உடன்பாடு




கடந்த வாரம் சனிக்கிழமை(29) கட்டார் நாட்டின் நலைநகரான டோகாவில் ஆப்கானிஸ்தான் தலிபான் தலைவரும் அமெரிக்காவின் சிறப்புத் தூதுவரும் கைகுலக்கிக் கொண்டதுடன், அமைதி உடன்பாட்டையும் பரிமாறிக் கொண்டனர்.

2011ஆம் ஆண்டு செப்ரம்பர் 11ஆம் நாள் அமெரிக்காவில் உள்ள உலகவர்த்தகமையம் மீதான தாக்குதலின் பின்னர் ஒக்டோபர் மாதம் அமெரிக்கா ஆப்கான் மீதான போரை ஆரம்பித்திருந்தது. இரண்டு தசாப்தங்கள் இடம் பெற்ற இந்த மோதல்களில் இரு தரப்பும் வெற்றியீட்டவில்லை என்பதற்கு அப்பால், அப்பாவி பொது மக்கள் பெருமளவில் உயிரிழந்துள்ளனர்.

இந்த மோதல்களில் 2,400 அமெரிக்கப் படையினர் உயிரிழந்துள்ளதுடன், 24,000 படையினர் காயமடைந்தும் உள்ளனர். இந்தப் போருக்கு அமெரிக்கா 2 றில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளது. அதாவது ஒரு வருடத்திற்கு 105 பில்லியன் டொலர்கள்.

ஆனால் உலக மக்களின் பசியை போக்க தமக்கு ஆண்டுக்கு 30 பில்லியன் டொலர்கள் தேவை என ஐ.நா தெரிவிக்கின்றது. அமெரிக்காவின் ஆப்கான் மீதான போர்ச் செலவு அதைவிட 70 பில்லியன் டொலர்கள் அதிகம்.

இந்த மோதல்களில் 360,000 ஆப்கானிஸ்தான் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த போரின் எதிரொலியாக பாகிஸ்தானிலும் பல பத்தாயிரம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவுடன் இணைந்து செயற் பட்ட மேற்குலக கூட்டணிப் படையினரில் பிரித்தானியா 455 படையினரையும், கனடா 158 படையினரையும் இழந்துள்ளது. மொத்தமாக 3,592 கூட்டணிப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

• • •



# உலகம் எதிர்பார்க்காத விளைவுகளை கொடுத்து வருகின்றது கோவிட் - 19 :

## பொருளாதார இழப்பு 347 பில்லியன் டொலர்கள்

**ஆர்த்திகன்**

கோவிட்-19 என்ற கொரோனா வைரஸ் உலகம் எதிர்பார்த்ததைவிட மிக வேகமாகவும், மோசமாகவும் பரவி வருவதால், உலக நாடுகள் எங்கும் ஒரு அச்சமான நிலை தோன்றியுள்ளது.

உலகம் எங்கும் 3522 மக்கள் இதுவரை பலியாகியுள்ளதுடன், 103,738 இற்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. சீனாவே அதிகம் பாதிக்கப்பட்டுள்ள போதும், தற்போது அது உலகம் எங்கும் உள்ள 100 இற்கு மேற்பட்ட நாடுகளில் மோசமாக பரவி வருகின்றது.

தென்கொரியா மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. 45 பேர் பலியாகியுள்ளதுடன், 7000 இற்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு நாளும் 500பேர் புதிதாக தொற்றுதலுக்கு உள்ளாகி வருகின்றனர். 28500 அமெரிக்கப் படையினர் தங்கியுள்ள தென் கொரியாவின் படைத் தளங்களிலும் நோய் பரவியுள்ளது. படைத் தளங்களில் பணியாற்றும் இருவர் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.



ஆசியாவின் நான்காவது பெரும் பொருளாதார நாடான தென் கொரி யாவின் பாதிப்பும், யப்பானின் பாதிப்பும் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. யப்பானில் கடந்த வியாழக்கிழமை வரையில் 1000 இற்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும் இந்த வருடம் ஜுலை மாதம் இடம் பெறும் ஒலிம்பிக் விளையாட்டு போட்டி இடம் பெறும் என யப்பானின் ஒலிம்பிக் அமைச்சர் சிகோ கசிமோட்டோ தெரிவித்துள்ளார்.

இதனிடையே, தென்கொரியாவுக்குஅடுத்த நிலையில் ஈரானில் மிக அதிகளவிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர், 120 பேர் அங்கு மரணமடைந்துள்ளதுடன், 3500 இற்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் எதிர்வரும் 20ஆம் நாள் வரையில் மூடப்பட்டுள்ளன.

ஐரோப்பிய நாடுகள் தற்போது மிகவும் மோசமான பாதிப்பை சந்தித்துள்ளன. இவற்றில் இத்தாலியே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு இதுவரையில் 233 பேர் பலியாகியுள்ளதுடன், ஏறத்தாள 6000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்தாலியில் ஏற்பட்டுள்ள இந்த மோசமான நிலையே ஐரோப்பிய நாடுகளை அதிகம் பாதித்துள்ளது. சீனாவுக்கு அடுத்ததாக அதிகம் பாதிக்கப்பட்ட நாடாக இத்தாலியே உள்ளது.

அங்கு பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுள்ளதுடன், அரசு 8.4 பில்லியன் டொலர்களை அவசரகால நிதியாக ஒதுக்கியுள்ளது.

அதேசமயம், பிரித்தானியாவில் இரண்டு பேர் மரணமடைந்துள்ளதுடன், 206 பேர் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவும் அவசரகால நிதியாக 8.3 பில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளது.

இதனிடையே, கோவிட்-19 வைரஸ் உலகின் பொருளாதாரத்தை அதிகம் பாதித்து வருவதால், உலகம் மிகப்பெரும் ஒரு பொருளாதார நெருக்கடிக்குள் செல்லும் ஆபத்துக்கள் தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பெருமளவான மக்கள் தமது விடுமுறை பயணங்கள் மற்றும் சுற்றுலாப் பயணங்களை இரத்துச் செய்து வருவதால், கடந்த வாரம் ஐரோப்பாவில் ஆயிரக் கணக்கான விமான சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. ஜேர்மனியை தளமாகக் கொண்ட லுப்தான்சா என்ற விமான நிறுவனம் மார்ச் மாதம் ஐந்தாம் நாள் வரையிலும் 7100 விமான சேவைகளை நிறுத்தியுள்ளது.

ஏனைய விமான சேவை நிறுவனங்களும் தமது சேவைகளை 25 விகிதமாக குறைத்துள்ளன. விமான சேவை நிறுவனங்களின் இழப்பு 113 பில்லியன் டொலர்கள் என ஆரம்ப கட்ட தகவல்கள் தெரிவிக்கின்ற போதும், இது பல மடங்கு அதிகரிக்கலாம் என அனைத்துலக வான் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது. முன்னர் இந்த தொகை 29 பில்லியன் என தெரிவிக்கப் பட்டிருந்தது.

இதனிடையே, பிரித்தானியாவின் பிளைபீ என்ற விமான சேவை நிறுவனம் முற்றாக முடங்கியதால் அந்த நிறுவனம் மூடப்பட்டுள்ளதுடன், 2000 பேர் வேலையிழந்துள்ளனர்.



பிரான்ஸ் மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளும் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. பிரான்ஸ் இல் 949 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 6 பேர் இறந்துள்ளனர். ஜேர்மனியில் 684 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தாகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, ஆபிரிக்க நாடுகளில் குறைவாக காணப்பட்ட இந்த நோய், தற்போது அங்கும் பரவ ஆரம்பித்துள்ளது. தென் ஆபிரிக்காவில் முதல் நபர் கடந்த வியாழக்கிழமை தொற்றுக்கு உள்ளாகியுள்ளார். இது தமது நாட் டின் பொருளாதாரத்தை அதிகம் பாதிக்கும் என தென்ஆபிரிக்காவின் அரச தலைவர் சிறில் ரமபோசா தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்தில் இதுவரையில் 82 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இஸ்ரேலிலும் நோய் அதிகம் பரவி வருவதால் ஜேசுநாதர் அவதரித்த பெத்தலகாம் தேவாலயம் மூடப்பட்டுள்ளது. பாலஸ்தீனத்திலும் மசூதிகளும் மூடப்பட்டுள்ளதுடன், பல இஸ்லாமிய நாடுகளில் தொழுகைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

அதேசமயம், பல்வேறு தகவல்கள் சமூகவலைத் தளங்களில் பரவி வருவது மக்களை அச்சத்தில் ஆழ்த்தி வருவதாக அமெரிக்காவின் வெளிவிவகாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயிரியல் ஆயுதமாக உருவாக்கப்பட்ட வைரஸ் கிருமியே உலகில் பரவ விடப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் கருத்துக்களை இரண்டு மில்லியன் பேர் ருவிட்டரில் பகிர்ந்துள் ளதாக அது மேலும் தெரிவித்துள்ளது.

இதனிடையே, உலகம் எங்கும் உள்ள பல நாடுகள் தமது பாடசாலைகள் மற்றும் பல்கலைக் கழகங்களை மூடியுள்ளதால் 290 மில்லியன் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐ.நா தெரிவித்துள்ளது.

வைரசின் தாக்கம் பொருளாதாரத்தை அதிகம் பாதிக்கும் என அனைத்துலக நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்ரலீ னாயோர்ஜீவா தெரிவித்துள்ளார். 2008ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை ஒத்த நெருக்கடியை உலகம் எதிர் நோக்குவதாகவும், வறிய நாடுகளுக்கு உதவியாக 50 பில்லியன் டொலர்களை தாம் வழங்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

விமான நிறுவனங்கள், சுற்றுலாத்துறை, சுற்றுலாத்துறை கப்பல் நிறுவனங்கள், விடுதிகள், உணவகங்கள், களியாட்ட விடுதிகள், வாகன உற்பத்தி நிறுவனங்கள் என்பன கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. பங்குச் சந்தையும் பாரிய சரிவைச் சந்தித்துள்ளது. வெள்ளிக்கிழமை (6) அது 61 பில்லியன் பவுண்களை இழந்துள்ளது. உலக மக்களின் வேலை வாய்ப்புக்களில் சுற்றுலாத்துறை 319 மில்லியன் மக்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கிவருகின்றது. உலகப் பொருளாதாரம் 347 பில்லியன் டொலர்கள் இழப்பை சந்திக்கலாம் என ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

யப்பானின் அஞ்ஜெஸ் மருந்து உற்பத்தி நிறுவனம் ஒசாக்கா பல்கலைக்கழகத்துடன் இணைந்து கோவிட்-19 வைரசிற்கு எதிரான தடுப்பு மருந்தை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

• • •




# சந்திரனுக்கும் பூமிக்குமிடையில் இடைத்தங்கல் முகாம்
# அமெரிக்கா - சீனா கடுமையான போட்டி

பூமிக்கும் சந்திரனுக்குமிடையிலான (*Cislunar*) சீனாவின் செயற்கைக்கோள் தொழில் நுட்பத்தை முறியடிக்கும் நோக்கத்துடன் சந்திரனை நோக்கி பத்தாயிரம் மைல்கள் மேலதிகமாகச் செல்லக் கூடிய அணுசக்தியில் இயங்கும் செயற்கைக்கோள் ஒன்றை தயாரித்து அனுப்புவதற்கு அமெரிக்கா திட்டமிட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்திரனுக்கும் பூமிக்குமிடையிலான மிகப்பெரும் பகுதியில் செயற்கைக்கோளை நிறுத்துவதன் மூலம் பூமியின் பல பகுதிகளை அவதானித்து இலகுவாக கையாள முடியும், இதுவே படைத் துறை இலக்காக இருந்தது. தற்போது அந்த இலக்கை சீனா அடைந்துள்ளது.

செறிவாக்கப்பட்ட யுரேனியம் எரிபொருளைக்கொண்ட அணு வெப்பசக்தி இயந்திரமானது செயற்கைக் கோளின் மேற்பகுதி யில் பொருத் தப்படவுள்ளது. இந்த இயந்திரம் ஐதரசன் எரி பொருளை வெப்பமடையச் செய்வதுடன், எரி நிலைக்கு கொண்டுவர உதவும், அதன் மூலம் வெளியேறும் வாயுசக்தி செயற்கைக்கோளை எதிர்த் திசையில் செலுத்த உதவும்.

பூமியில் இருந்து செயற்கைக்கோளை செலுத்துவதற்கு இந்த அணுசக்தி இயந்திரம் பயன்படுத்தப்பட மாட்டாது, அது நீண்ட தூர பயணத்திற்கும், வேறு திசைகளில் பயணிப்பதற் குமாக பயன்படுத்தப்படும்.

**நன்றி :** The Daily Beast

சந்திரனுக்கு செல்லும் அமெரிக்க விண் வெளி வீரர்களுக்கு இது ஒரு இடைத்தங்கல் நிலையமாக செயற்படும். 2024 அதனை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அணு சக்தி செயற் கைக்கோள் இதற்கு மிகவும் பயனுள்ளதாகும்.

அணுசக்தி இயந்திரத்தை கொண்ட செயற்கைக்கோள், அல்லது இராணுவ செயற்கை கோள் அல்லது விண்வெளி ஆயுதம், மிக அதிக வேகத்துடன் பல பத்து ஆண்டுகள் பயணிக்க வல்லது.

அணுசக்தி செயற்கைக்கோளை வடிவமைப்பது அமெரிக் காவுக்கு இது முதற் தடவை யல்ல, அதனை மேற் கொள் வதும் இல குவான தல்ல. ஆனால் இந்த முயற்சியில் அமெரிக்கா வெற்றி பெற்றால், அதன் விண்வெளி நடவடிக்கை கள் விரிவடையும், புதிய அதி உயர் தூரத்திற்கு செய ற்கைக்கோள் செல்வதால், விண்வெளி நடவடிக்கை கள் புதிய பரிமாணத்திற் குச் செல்லும் என நவீன பாது காப்பு ஆய்வு நிறுவனம் தெரிவி த்துள்ளது.



இந்த திட்டம் 1960 களில் முன்வைக்கப் பட்ட போதும், அதனை அன்றைய அமெரிக்க அரச தலைவர் றிச்சாட் நிக்சன் தடுத்து விட்டார். ஆனால் தற்போதுள்ள இரசாயன இயந் திரத்துடன், ஒப்பி டும் போது இது மிகவும் வினைத்திறன் மிக்கது என நாசாவின் பேச்சாளர் கிளயா ஸ்கெலி தெரிவித் துள்ளார்.

படைத்துறை ரீதியாக இந்த செயற்கைக் கோள் மிக வும் சிறந்ததாக அமையும், செயற்கைக்கோளை பல திசை களில் பயன்படுத்த முடியும் என அலபாமா பல்கலைக் கழகத்தின் விண்வெளி ஆய்வு அதிகாரி டலே தோமஸ் தெரி வித்து ள்ளார்.

அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளின் விண்வெளி ஆய்வு நிறு வனங்களும் மற்றும் தனியார் நிறுவனங்களும் சந்திரனில் இருந்து கனிம வளங்களை அகழ்வத ற்கு ஆர்வம் கொண்டுள்ளன. இந்த விண்வெளி முயற்சியே செவ்வாய் கிரகத்திற்கு மனிதனை அனுப்புவதற்கான முயற்சியாகவும் அமைந் துள்ளது.

அணுசக்தி வெப்ப இயந்திரம் விண்வெளி யில் ஆதிக்கத்தை செலுத்துவதுடன், அதிகளவான பகுதியை நிர்வகிக்க வல்லது என டீஏஆர்பிஏ அமைப்பின் பேச்சாளர் ஜராட் அடம்ஸ் தெரி வித்துள்ளார். இந்த நடவடிக்கைக்கு (*Demon-stration Rocket for Agile Cislunar Operations” pro-gram, or DRACO*) 21 மில்லியன் டொலர்களை 2021ஆம் ஆண்டுக்கான செலவாக இந்த அமைப்பு கோரியுள்ளது.

அமெரிக்காவின் காங்கிரஸ் சபை 10 மில் லியன் டொலர்களை வழங்கியுள்ளது. இந்த நிதி இயந்திரத்தை ஆய்வு செய்வதற்கு பயன் படுத்தப்படுவதுடன், 2021ஆம் ஆண்டுக்கான நிதி யில் இருந்து சில பகுதிகளை தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சந்திரன் பூமியில் இருந்து 240,000 மைல்கள் தொலைவில் உள்ளது. ஆனால் மனிதர்களால் உருவாக்கப்படும் செயற்கைக்கோள்கள் பூமியில் இருந்து சில ஆயிரம் மைல்கள் தொலைவிலேயே பயணிப்பதுண்டு. எனவே தற்போது உள்ள இந்த இடைவெளியை நிரப்புவதற்கு சீனாவும், அமெரிக்காவும் போட்டியிடுகின்றன.

2019ஆம் ஆண்டு யாரும் நெருங்க முடி யாத சந்திரனின் மறுபக்கத்தை சீனாவின் செயற்கைக் கோள் எட்டியிருந்தது. ஆனால் தற்போது அந்த பகுதிக்கு மனிதர்களை அனுப்பும் முயற்சியில் சீனா இறங்கியுள்ளது. இந்த நடவடிக்கை இந்த வருடத்தின் நடுப்பகுதியில் இடம்பெறலாம்.

பூமியில் இருந்து நெடுந்தூரத்திலும், சந்தி ரனுக்கு அண்மையாகவும் உள்ள பகுதியில் மனிதர் கள் தங்கும் விண்வெளி நிலையத்தை அமைக்கும் பணியை விரைவுபடுத்துமாறு அமெரிக்காவின் விண்வெளி மையம் நாசா, அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பை கேட்டுள்ளது. அதற்கு 30 பில்லியன் டொலர்கள் தேவைப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

சந்திரனுக்கான 2020ஆம் ஆண்டு திட்டத்திற்கு 1.6 பில்லி யன் டொலர்கள் தேவை என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரி வித்திருந்தார். ஆனால் காங்கிரஸ் சபை 1.3 பில்லியன் டொலர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

1960களில் அணுசக்தி செயற்கைக்கோளை பாலைவனத்தில் பரிசோதனை செய்யும் நிலை இருந்தது. அதன்மூலம் வெளிவரும் கதிர்வீச்சுக்கள் காற்றில் கலந்தாலும் அன்று யாரும் அதற்கு எதிராக போராடுவது இல்லை. ஆனால் தற்போது நிலமை மாறிவிட்டது. எனவே கணணிகளின் உதவியுடன் தான் பரிசோதனைகளை செய்ய முடியும் என தோமஸ் தெரிவித்துள்ளார்.

1972ஆம் ஆண்டே சந்திரனுக்கு மனிதன் இறுதியாக சென்றிருந்தான். அதுவே அப்பலோ வின் இறுதியான பயணம். ஆனால் தற்போதைய முயற்சி மனிதனை அங்கு நீண்ட நாள் தங்க வைக்கும் முயற்சியாகும். அதனை தாமே முதலில் மேற்கொள்ள வேண்டும் என பென்ரகன் விரும்புகின்றது. எனவே இந்த முறை அணுசக்தி செயற்கைக்கோளை நிச்சயமாக தம்மால் தயாரித்து செலுத்த முடியும் என அமெரிக்கா நம்புகின்றது.

• • •